நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 08 ஆகஸ்ட்-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரி
## கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறியாளர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |

# பொருளடக்கம்

1. இதழ் மணம் 4

2. தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல் - 2 6
முதுமுனைவர் இரா.இளங்குமரன்

3. குருநாதனும் குருவடியாரும் 11
முனைவர் மு.மணிவேல்

4. திருமுறைகளில் வாழ்க்கை முறைகள்
(மூவர் தேவாரங்களில் வாழ்வியல் நெறிகள்) 17
முனைவர் உ.கருப்பத்தேவன்

5. இல்லறக்கிழத்தி மாண்புகள் 28
சி.கணேசையர்

6. சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம் 33
முனைவர்.செ.ரவிசங்கர்

7. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சங்கஇலக்கிய ஆராய்ச்சிவளம் 37
பேரா.முனைவர் இ.கி.இராமசாமி
சென்ற மாத இதழின் தொடர்ச்சி

7. சங்கச் செய்திகள் 39

# இதழ் மணம்

சீரிளமைத்திறம் வியந்து என்ன பயன்? மொழிமரபையும் தமிழ் எழுத்தையும் போற்றிப் பாதுகாக்காததனால் நாடும், மொழியும் மக்களும் இழந்த இழப்பு எப்படிச் சீரழிவை ஏற்படுத்துகிறது என்பதைத் தமிழாசான் இளங்குமரனார் தொல்காப்பிய வழிநின்று விளக்கும் திறம் இனிது; தமிழ் மாணவர்கள் நுண்ணிதின் கற்றுத் தங்கள் அறியாமையைப் போக்குவதோடு அறியாதவர்கள் செய்யும் தமிழ்க் கேட்டையும் எதிர்கொள்ளும் வலிமைபெற அறிஞர் இளங்குமரனாரின் கட்டுரைத் தொடர் பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

இன்று ஆந்திர மாநிலத்தோடு இருக்கும் சித்தூர் மாவட்டம் தமிழ் மாவட்டமாக இருந்தது. அதனைத் தமிழ்நாட்டு அரசியலாரின் அறியாமையால் ஆந்திர நாட்டோடு இணைத்தனர்; அதன்பின் அப்பகுதியில் இருந்த தமிழ்ப் பெயர்ப் பலகைகளையெல்லாம் தெலுங்கு மொழியில் எழுதினர். மக்களுடைய மொழிவழக்கு உரிமையை வலிந்து அழித்தொழித்தனர். அதனால் வடவேங்கடம் தெலுங்கு நாடாயிற்று என்னும் உண்மையை நுண்ணிதின் உணர்ந்தால் தமிழ் மக்களுக்கும் கற்றவர்களுக்கும் விழிப்புணர்ச்சியும் பாதுகாப்பு உணர்ச்சியும் எவ்வளவு இன்றியமையாதது என்பது புரியும்; புரிதல் என்பது அறிவுடைமைக்கு இன்றியமையாத்தேவை; அதுவே இன்று அரசியலாரிடமும் அரசு அலுவலர்களிடமும் பற்றாக்குறையாக உள்ளது.

பேராசிரியர் மு.மணிவேல், "குருநாதனும் குருவடியாரும்" என்னும் தலைப்பில் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமியின் கவிச்சுவையை நயம்பட உரைக்கிறார். "இலக்கணம் தெரிந்த அருட்கவி தண்டபாணி சுவாமிகள்" என ஆசிரியர் கூறுவது இலக்கணம் கற்பனையை விடுத்து இலக்கியம் படைத்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மரபு வழிநின்று முருகனைப் பாடிய அருட்கவிஞர் என்பதைக் காட்டும்.

கந்தக்கடம்பு மலர்மாலை எனத்தன் கவிதையை ஆசிரியர் குறிப்பிடுவது படித்து இன்புறத்தக்கது. கந்தம் என்பது மலரின் இயல்பாகிய மணம்; அது தன் இயல்பில் வேற்றுமையின்றி நுகர்வோர் அனைவருக்கும் மணம்பரப்பி இன்பம் பயக்கும்; மலருக்கு மணம்பரப்புவதில் வேற்றுமைகிடையாது; அதுபோல் என் கவிதையும் முருகவேளை உணர்வதற்குரிய அறிவையும் அதனால் பெறும் இன்பத்தையும் அனுபவிக்கும் பேற்றினை அனைவருக்கும் நல்கவேண்டும் என வண்ணச்சரபம் சுவாமி வேண்டுவது; அவருடைய கவிதை மக்கள் அனைவருக்கும் பொது என்பதையும் சமயம் கடந்த தமிழ்க்கவிதை என்பதையும் உணர்த்தும் பாங்கு இன்புறத்தக்கது.

கபிலர் ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவித்தது எனக் குறிஞ்சிப்பாட்டை எழுதுவார்; அதுபோல் வண்ணச்சரபம் தம் தமிழ்க் கவிதையும் வேற்றுமையில்லாது மக்கள் வாழும் உலகம் அனைத்தையும் தழுவியது எனக் கூறுவது அப்பெரியாரும் மரபுவழி தமிழ் உணர்ந்த பெருமகனார் என்பதைப் பேராசிரியர் மு.மணிவேல் எடுத்துரைக்கும் திறம் கற்று இன்புறத்தக்கதாகும்.

முனைவர் செ.ரவிசங்கர் "சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம்" என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்குறித்த கட்டுரை எழுதியுள்ளார். சிறுபஞ்சமூலம்

என்பது கண்டங்கத்தரி, சிறுநெருஞ்சி சிறுமல்லி, பெருமல்லி, சிறுவழுதுணை ஆகியவற்றின் வேர்கள்; மருத்துவர்கள் பயன்படுத்தும் நுட்பம் அளப்பரியது; தரையோடு தரையாகக் கிடக்கும் இம்மூலிகைகள் பயன்படுவது போலத் தம் நூற் கருத்துக்கள் பயனுள்ளவை என்பதைக் கற்பவர்களுக்கு உணர்த்துதல் வேண்டி உவமையைச் சொல்லிப் பொருளை நம் சிந்தனைக்குப் பொருளாக வைத்து நூல் செய்துள்ளார். அரசனுக்கும் அமைச்சனுக்கும் ஒரு செய்யுள் யாத்துள்ளார்.

"தன் நிலையும், தாழாத் தொழில் நிலையும், துப்பு எதிர்ந்தார் இன்நிலையும் ஈடுஇல் இயல்நிலையும், துன்னி, அளந்து அறிந்து செய்வான் அரைசு; அமைச்சன் யாதும் பிளந்து அறியும் பேர் ஆற்றலான்"

அரசன் தன்நாட்டின் உள் கட்டமைப்பு குறித்த அறிவு, மக்கள் செய்யும் தொழிலில் வீழ்ச்சி ஏற்படாவண்ணம் அனைவரும் உழைத்துப் பொருளீட்டித் தங்கள் அன்றாட வாழ்க்கை நிலையில் தாழ்ச்சி ஏற்படாவண்ணம் தொழிற்கட்டமைப்புப் பாதுகாப்பு, உழவுத்தொழில் பெரும்பான்மையாக இருப்பதால் அவர்களுடைய குடும்பநிலையும், உலகியலில் புதிய மாற்றங்கள் ஏற்படும்போது அவற்றை எதிர்கொள்ளும் ஈடுஇல் இயல் நிலையும் விரைந்து அளந்து அறிந்து செய்வது அரசு என்னும் பொருளாதாரக் கோட்பாடு இன்று உலகம் முழுவதுமுள்ள வளர்ந்த பொருளாதார நாடுகளில் கடைப்பிடிக்கின்ற அரசியல் பொருளாதாரமாகும். அதனால் ஐரோப்பா, சப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் விழிப்புடன் இருந்து இன்று மேன்மையுற்று இருக்கின்றன. நம் நாட்டில் அத்தகைய விழிப்புணர்ச்சி இன்மையால் நாம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டு பழம்பெருமை பேசுகிறோம். இந்தியக் குடிமக்கள் வீட்டில் கழிப்பறை என்னும் கோட்பாடு உருவாவதற்கே இந்தியத் தலைமை அமைச்சருக்கு எழுபது ஆண்டுகள் ஆகியிருக்கிறது. எழுபது ஆண்டுகளாக ஆண்ட அமைச்சர் பெருமக்கள் இந்த அடிப்படை வசதியைக் கூடச் சிந்திக்கவில்லை என்பது நாம் எந்த அளவுக்குப் பின்தங்கி இருக்கிறோம் என்பதன் அளவுகோலாகும். சிறுபஞ்ச மூல ஆசிரியர் காரியாசன் அதனால் மகா காரியாசான் எனப்போற்றப்படுகிறார். அவர் அரசர் முதல் அனைவருக்கும் ஆசிரியராக இருந்தவர்; அவருடைய கருத்துக்கள் மக்களைச் சென்றடையும் வண்ணம் எடுத்துரைக்கும் கற்றல்முறை தேவைப்படுகிறது என ஆசிரியர் செ.ரவிசங்கர் முயற்சி பாராட்டத்தக்கது.

பேராசிரியர் உ..கருப்பத்தேவன் திருமுறை நூல்களில் மிக்க ஆர்வமுடையவர். அவர் திருமுறைகளில் வாழ்வியல் நெறிகள் குறித்து எழுதுகிறார். கோத்திரமும் சாத்திரமும் பேசிப்பயன் இல்லை; சடங்கும் ஆச்சாரமும் குலமும் இறை அனுபவத்திற்குப் பயன்படா; ஒழுக்கமும் அன்புமே பயனுடையவை என்பதைத் திருமுறை வழிநின்று உ..கருப்பத்தேவன் விளக்கும் பாங்கு அருமை அவர் திருமுறை நூல்களில் ஆழங்காற்பட்டவர் என்பதை எடுத்துரைக்கிறது.

சென்ற நூற்றாண்டில் செந்தமிழில் வெளிவந்த தமிழ்ப் பேராசான் சி.கணேசையர் கட்டுரை கற்பவர்க்கு நகைச்சுவை இன்பம் தருகிறது. அதனையும் படித்து இன்புறுக.

# தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்

## 2

முதுமுனைவர் இரா.இளங்குமரன்

தொல்காப்பியம் முதல் இலக்கண நூலன்று. அதற்கு முன்னரே இலக்கிய இலக்கண நூல்கள் மிகுதியாக இருந்தன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து தொகை வகைப்படுத்திய நூலே அது என்பது, தொல்காப்பியர் சொற்களாலேயே விளங்கிக் கிடக்கின்றன.

அந்நூல்கள் நமக்குக் கிட்டாது ஒழிந்த இழப்பை, அவர் இயற்றிய தொல்காப்பிய வழியே அடையப்பெறும் பேறு பெற்றோம். அழிந்த நூல்களின் தூய பிழிவுச்சாறே தொல்காப்பியம் என்பதால், முந்தையர் கண்ட அரும்பெரும் வளங்களைப் பெற்றவர்கள் ஆகின்றோம்.

"எழுத்தெனப் படுப,
அகர முதல னகர இறுவாய்
முப்பஃது என்ப"

என்னும் முதற்பாவே தம் காலத்திற்கு முன் இருந்தவர் படைத்து வைத்த கொடை என்பதைக் குறிக்கிறது.

அகர முதல் ஔகாரம் வரை உள்ள 12 எழுத்தும் உயிர் என்றும்

ககர முதல் னகரம் வரை உள்ள 18 எழுத்தும் மெய்யென்றும்

தெளிவாக்குகிறார். இவ்விரு வகைகளிலும் அமையாத ஆய்தம் என்னும்

எழுத்தொன்றும் உண்டு என்றும் அதற்குத் தனிநிலை என்னும் பெயரும் உண்டு என்றும் கூறுகிறார்.

இவ்வெழுத்துக்களை முதற்கண்ணே சொல்வது ஏன்? இவையே தமிழ் எழுத்து, எதனை மிகுத்தலோ, குறைத்தலோ ஆகாது என்பதை மரபாகக் கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கவேயாம்.

ஆங்கிலம் 26 எழுத்துக்களை உடையது. வேண்டும் சொற்களை எல்லாம் எடுத்துப் பயன் கொள்ளும் அம்மொழி, தன் எழுத்துக்களுக்கு மேல் ஓர் எழுத்தையாவது எடுத்துக்கொண்டதா? வேற்றுமொழி எழுத்தொலி வரவேண்டிய இடத்திலும் தம் மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுதுவதை அல்லாமல், அவ்வொலி தம் மொழியில் இல்லை என்று அவ்வொலிக்குரிய எழுத்தை எடுத்துப்பயன்படுத்திக் கொண்டது இல்லையே! 'தமிழ்' என்பதைத் தம்மொழி இயல்புப்படி தானே எழுதினர். வடமொழியாளரும் தமிழ் என எழுத எழுத்து இல்லாததால் தானே 'த்ரமிளம்' ('திராவிடம்') எனக் கொண்டனர்.

இந்த மொழிக் காப்பு உணர்வால்தான், அக்காலத்து வழக்குக்கு வந்த வடமொழிச் சொற்களைச் சொல்ல நேர்ந்தால், வட எழுத்தை நீக்கி, தமிழ் மரபுப்படி எழுதுக என்றார். மொழி பெயர்ப்புச் செய்ய வேண்டும் என்றாலும் தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு தமிழ் முறைப்படியே எழுதிப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

"பிற சொல்லைப் பயன்படுத்தலாம் என்பவர், பிறமொழி எழுத்துகளைக் கொள்ள மறுப்பது ஏன்"? என எண்ணுவர்! வினவவும் செய்வர்! இவை அவர் மொழிவழக்கு அறியாமையால் வினவுவனவாம்!

எந்த மொழியிலும் உலகிலுள்ள மொழிகளின் ஒலிகள் எல்லாமும் இரா.அவர்கள் பழக்க வழக்கம் பண்பாடு நாகரிகம் ஆகியவற்றுக்கு வேண்டிய ஒலிகள் எவையோ அவற்றையே அடங்கல் செய்துளர். அதனால்தான் 'தமிழ்' என்பதை அவ்வொலிமாறாமல் எழுத எழுத்து இல்லையென்றாலும் 'ழ' எழுத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் மொழிக்குத் தக 'தமில்' என ஆங்கிலர் எழுதினர். சீனம், சப்பான், உருசியம், செருமானியம், பிரெஞ்சியம் என உள்ள மொழிகளின் ஒலிகளை எல்லாம் கொண்டு வந்து தமிழ் நெடுங்கணக்கில் குவித்து விட்டால், இவற்றில் தமிழ் எழுத்து எது எனக் காணவே அரும்பாடாகிவிடும்!

வளம் உள்ள நாட்டார் எல்லாம் பணத்தைக் கொட்டி, தமிழகப் பரப்பெல்லாம் வாங்கிவிட்டால் எப்படித் தமிழ்மண்ணும், தமிழ் இனமும் இல்லாமல் அற்றுப்போகுமோ, அதுபோல் தமிழ் மொழியும் இல்லாமல் அழிந்து போகும்!

*"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ*
*னற்றா டொழாஅ ரெனின்"*

என்னும் திருக்குறள் கடவுள் வாழ்த்து இரண்டாம் குறளின் இரண்டாம் அடியை எழுத, வடமொழியில் ஓர் எழுத்துத் தானும் இல்லை. அவ்வாறானால் அவ்வடியை எழுதாமல் விடுவதா? (-) கீற்றுப்போட்டு விடுவதா? வடமொழியில் உள்ள எழுத்துக்களைக் கொண்டே பெயர்த்துக் கொள்வர்! அவ்வெழுத்துகள் தம் மொழியில் இல்லை எனச் சேர்க்கமாட்டார்.

*"குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த மழலை"*

இத்தொடர் சிலப்பதிகாரத்தில் உள்ளது. இதனை இவ்வொலியோடு வடமொழியிலோ ஆங்கிலத்திலோ பெயர்க்க முடியுமா? முடியாது என்பதால் இவ்வெழுத்துகளை உங்கள் மொழியில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பது மொழி நாகரிகம் ஆகுமா? மாந்தர் நாகரிகம் தானும் ஆகுமா?

தமிழில் கிரந்த எழுத்துக்களைச் சேர்ப்பது எத்தகைய மொழிக்கேடு - மொழிக்கொலை - மொழியியல் அறியாத்தனம் என்பதை எண்ணினால் உண்மையாக விளங்கும். ஆனால் புகுத்துவதே நோக்கமாக உடையவர்.

அயலவரைப் பற்றியோ அயல்மொழிக்கேடு பற்றியோ துளியும் எண்ணுதல் கொள்ளார்!

மேலும் 'கிரந்தம்' ஐந்தெழுத்துத்தானே எனக் **கரவாகவும் சொல்வார்.** ஐந்து பன்னிரண்டு அறுபது எழுத்து என்பதை மறைத்து ஐந்தெழுத்து என்பார்! தமிழன் சிறப்பெழுத்துக்கள்' ற ன ழ எ ஒ' என்னும் ஐந்து தானே; அதைச் சேர்த்துக் கொள்வதுதானே என்றால், எங்கள் மொழி தேவமொழி, பூசுரர் (நிலத்தேவர்) மொழி, கடவுள் மொழி, கடவுளோடு பேசும் மொழி ஆதலால், உங்கள் மொழியின் எழுத்தை எடுத்துக்கொள்ளோம் என்பார். ஆனால், வடமொழியில் ஐந்தில் இரண்டு பங்கு தமிழ்; அதன் செழுமைக்கும் செம்மைக்கும் அடிப்படையாக இருந்தது தமிழ்மொழி என்பதனைப் பாவாணர், **'வடமொழி வரலாறு'** என்னும் நூலில் நிலைப்படுத்தினார்.

கிரந்த எழுத்துக் கலந்த மணிப்பவழ (மணிப்பிரவாள) நடையை, **பரிதிமாற் கலைஞர் 'ஆபாச பாசை'** என எழுதினார்!

ஆனால் தொல்காப்பியத்தை எழுத்தெண்ணிப்படித்த ஒரு தமிழ்ப்பிறவியர் "ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்றறையவே நாணுவர் அறிவுடையோர்; யானும் அதுவே!" என்று நாணமின்றி மொழிந்தார்.

கிறித்தவம் பரப்ப வந்த கால்டுவெலார் பன்மொழி பயின்று ஒப்பியல் நூல் எழுதினார். அவர் 'தமிழைச் செம்மொழி' என்றார். திரவிட மொழிகளின் தாய் என்றார். கால்டுவெலார் கூறிய 'கிளாசிகல் லேங்வேச்சு' என்பதை **'உயர் தனிச்செம்மொழி'** என இச் செந்தமிழ் மாதிகையின் முதல் இதழிலேயே எழுதினார் பரிதிமால்! **'மொழி வரலாறு'** என்னும் நூலிலும் இக் கட்டுரையைச் சேர்த்து வெளியிட்டார்.

மொழிக்கேடர் - மொழிவளர்ப்பார் போலவும் - தட்டச்சு - கணினி ஆகியவற்றுக்குத் தக எழுத்து வடிவைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் ஒருவர் தொடங்க, வரிசை பிடித்து நின்றனர். **'மொழிச்சீர்திருத்தமா? மொழிச் சீரழிப்பா?'** எனத் தமிழகச் சான்றோர்களும், அயல் நாடு வாழ் தமிழர்களும் ஓங்கிக் குரல்கொடுத்ததால் சற்றே ஒடுங்கியுள்ளது! முற்றும் ஓய்ந்து விடவில்லை! மணிப்பவழக் கேட்டுக்குத் துணைபோவது அக்கேடு என்பது அவர்கள் காட்டும் வடிவ மாற்றங்களை மேலோட்டமாகக் கண்டாலும் புரிந்து விடும்!

**"ஒட்டகத்துக்கு ஒரு பக்கமா கோணல்;**
**தமிழுக்கு ஒருபக்கமா கேடு"**

என்றார் பாரதியார்.

இன்னொருவர்க்குத் திடுமென ஒருமின்னல் வெட்டியிருக்கிறது! ஐ, ஔ வேண்டியதில்லை' 'அய், அவ்' என்று எழுதினால், 'ஐ' வரிசையும் 'ஔ' வரிசையும் குறைந்துவிடும் என்பது அவர் எண்ணம். தொல்காப்பியத்தைத்

தொட்டு, முதற்சில நூற்பாக்களைப் படித்தவர்களுக்கும் இது எவ்வளவு கேடானது என்பது விளங்கும்.

நெட்டெழுத்துகள் ஏழு என்பதை ஐந்தாக்க நினைக்கும் அவர்க்கும் அவர் வழிஞர்க்கும்,

*“நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி*
*குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே”*

என்னும் ஒளிப்பாடே இல்லை போலும்.

அய் - நெடிலாகி விடுமா? நெடில் பொருள் தருமா?

அவ் - நெடிலாகிவிடுமா? நெடில் பொருள் தருமா?

ஐ - நெடில்; ஓரெழுத்து ஒருமொழி.

*“என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர் என்னை*
*முன்னின்று கன்னின் றவர்” (771)*

என் ஐ - என் தலைவன்! அய் - தலைவனா? அய் என்பது தடுமத்தால் உண்டாகும் கோழை! செம்மறியாட்டு மூக்கில் வழிவதுமாம்.

ஐ - ஐந்து, அன்னை, தந்தை, அழகு, வியப்பு முதலாம் பொருள் தரும் ஓரெழுத்து ஒரு மொழி!

‘அய்’ போட்டு அந்தப் பொருள்களைத் தந்து விடலாமே என்பர்; அது எங்கே போய் நிற்கும்?

“எந்த எழுத்தையும் போட்டு, எந்தப் பொருளையும் தந்துவிடலாம்” என்றால், மொழி மொழியாக இருக்குமா?

ஐ - இரண்டாம் வேற்றுமை உருபு. அங்கேயும் ‘அய்’ போடுவதா? ‘ஔ ஔ’ - ஒலிக்குறிப்பு.

ஔவை - பெயர், இதனை ‘அவ்வை’ ஆக்கி, ‘அவ் வை’ என்றால் என்ன பொருள் தரும்! ‘அந்த வைக்கோல்’ என்பது தானே!

அவ் - சுட்டுப் பெயர் ஔ - சுட்டா?

ஒவ்வொருவர் கையெழுத்தும் ஒன்றுபோல் இராது. ஒருவர் எழுத்தேயும் எப்போதும் ஒன்றுபோல் இராது. அவ் வடிவு அவரைச் சார்ந்தது. அதனைப் பொதுமைப்படுத்தி அளவு கோல் ஆக்கிவிடக்கூடாது! பல்லாயிரம் ஆண்டுகளாக - பலகோடி மக்களால் - வழிவழியே பாதுகாக்கப் பட்டுவரும் எழுத்தை, ‘எடுத்தேன்; கவிழ்த்தேன்’ எனச் செய்துவிடல் ஆகாது! அது மரபு அழிப்பு ஆகிவிடும்! மக்கள் வழக்கில் சில மாற்றங்கள் உண்டாகும். அது பரவி விரிவாகவும் கூடும்! மொழிக்கு அம்மாற்றத்தால் கேடு இல்லை என அறிந்தால் இலக்கிய ஆட்சி பெறும். மக்கள் ஆட்சியும் இலக்கிய ஆட்சியும் கொண்டு, இலக்கண ஆட்சியும் ஆகும்.

தென்னம்பிள்ளை, கீரிப்பிள்ளை, அணிற்பிள்ளை, கிளிப்பிள்ளை என நிலைத்திணை, ஊர்வன. பறப்பன என்பவற்றுக்கு வழங்கப்படுகிறது. ஆண்பிள்ளை, பெண்பிள்ளை எனவும் வழங்குகிறோம்.

தொல்காப்பியர் காலத்தில் மக்களுக்குப் பிள்ளைப்பெயர் இல்லை. அஃறிணை உயிரிகளுக்கே வழங்கப்பட்டது; நெல்லும் புல்லும் பிள்ளைப் பெயர் கொள்ளா என்றும் கூறினார்.

நாம் தெய்வங்களுக்கும், உயர்ந்த மக்களுக்கும் 'பிள்ளைத் தமிழ்' பாடிக்கொண்டிருக்கிறோம். ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் என இலக்கணங்களும், படைப்புகளும் பெருகவே செய்கின்றன. மொழிக்கேடு இல்லாத - மொழிவளம் செய்கின்ற - இவற்றைப் புதிய வரவாகவும் வளமாகவும் போற்றவே செய்கிறோம். இதற்கும் தொல்காப்பியர் பெரும்பாலும் ஒவ்வோர் இயல் முடிவிலும் மொழிக்குப் புதுவரவாக வருவனவற்றை மொழிக்கேடு இல்லாமல் போற்றிக் கொள்க; என்றே கூறுகிறார்.

புதுப்பா (புதுக்கவிதை) என்றும், 'ஐக்கூ' என்றும் 'துளிப்பா' என்றும் வருகின்றனவே! இவை தொல்காப்பியர்க்கு உடன் பாடானவையா எனின், "ஆம்! முழுதுறும் உடன்பாடே "எள்ளல் முறை! 'அடி அளவில்லாத பாவகை' என்று கூறுகிறார். பழமொழி விடுகதை முதலியவற்றையும் ஏற்கிறார்" 'நான் புதிது செய்கிறேன்' என்று மொழியைக் கெடுக்காதே" என்பதே அவர் கொள்கை.

இவ்வாறு அழுத்தமான கொள்கையை வெளிப்பட அறிவித்திருந்தும் பின்வந்தோர் போற்றாமைக் குறையால் ஏற்பட்ட இழப்புப் பெரிதாம்.

மொழி வேறுபட்ட நிலம், வேங்கடத்துக்கு அப்பாலேதான் என்பதைப் பாயிரம் பாடிய **பனம்பாரனாரை** அன்றியும், சங்கச்சான்றோர்கள் 26 இடங்களில் **"வேங்கடத்து உம்பர் மொழிபெயர் தேயம்"** எனக்குறித்திருந்தும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் எனத் தமிழ்மொழி பிரிந்தும், நிலப்பகுதி குறைந்தும், பல்வேறு சிக்கல்களுக்கு ஆட்பட்டும் உள்ள பட்டறிவு கொண்டாவது மொழியைச் சிதையாமல் காக்க வேண்டும் அல்லவா! காவாமல் தமிழன் 'சீரிளமைத்திறம் வியந்து' என்ன பயன்?

- தொடர்வோம்.

# குருநாதனும் குருவடியாரும்

முனைவர் மு.மணிவேல்
தகைசால் பேராசிரியர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளர், மகான், பக்தியாலான பல்லாயிரம் பாடல்களைப் பாடிய பெருங்கவி வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள். 1839-ல் திருநெல்வேலியில் ஞானப் பிறப்புக் கொண்ட அடிகளார் 1898-ல் திருவாமாத்தூரில் ஞானச் சமாதி அடைந்தது வரை அவர் வாழ்ந்த அறுபதாண்டு காலத்தில் அறுபதாயிரத்திற்கு நெருங்கிய அருட்பாடல்களை அருளியிருக்கிறார். அவருக்கு முன்னர் வாழ்ந்த 'திருப்புகழ் அருட்கவி' அருணகிரியார் போலவும் அவருக்கு மேலாகவும் போற்றத்தக்க பக்திக்கவிதைகள் அடிகளாரின் கவிதைகள். முருகப் பெருமானே தம் வாழ்வாகவும் பற்றாகவும் கொண்டு புகழ் செய் பாடல்கள் பாடியும் பூசைகள் செய்தும் வாழ்ந்த வாழ்க்கையை உடையவர் அவர்.

தமிழ்க் கவிதைகளையும் தமிழ்க் கடவுளர்களையும் ஆழக் கற்றவர் அடிகளார். ஆழக்கற்ற தமிழ்க்கவிதை அனுபவத்தால் அருட்பாடல்களைப் பாடித் தம் மனம் கொண்ட கடவுளை ஆட்கொள்ள வேண்டி வாழ்ந்தவர். திருமுருகன் அவர் பற்ற நினைத்த, பற்றிய கடவுள். அக்கடவுளின் ஆயுதமாம் வேல் அடிகளாரின் பூசைக்குரிய பொருள். முருகனே அவருக்கு எல்லாம்; முருகனே நாதன், குருநாதன். அந்நாதனைப் பாடுவதே அவர்தம் நெறியாக இருந்தது.

இலக்கணம் தெரிந்த அருட்கவி தண்டபாணி சுவாமிகள். இலக்கண நூல்களோடு இலக்கிய நூல்கள் பலநூறு செய்தவர்; பதிகங்களாய் அவர் பாடிய பாமாலைகள் பல; அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் என்றிவ்வாறான இலக்கியங்களும் பல. அங்ஙனம் பாடிய, முருகப் பெருமான் குறித்தமைந்த 'குருநாதன் அந்தாதி' என்னும் இலக்கியத்தில் அவர் குறித்த செய்திகளை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரை.

'அந்தாதி' என்பது ஒரு பாட்டின் இறுதி எழுத்து / அசை / சீர் / சொல் / தொடர் அடுத்த பாட்டின் தொடக்கமாகவும் இறுதிப்பாட்டின் முடிவு முதற்பாட்டின் தொடக்கமாகவும் அமையப் பாடுபொருள் இங்ஙனம் அமைய நூறு பாடல்கள் பாடுதற்குப் பெரும் புலமை வேண்டும்; தாம் கருதிய பொருளையும் புலப்படுத்துதல் வேண்டும். இவ்வகையில் புலமை நலம் கூடிய வகையில்

குருநாதன் அந்தாதியை அடிகளார் பாடியிருக்கிறார்.

இந்நூற் பாடல்கள் நூறினோடு முன்னதாகக் காப்புப் பாடலொன்றும் பின்னதாக நூற்பயன் கூறும் பாடலொன்றும் கொண்டமைந்தது இந்நூல். முன்னும் பின்னும் அமைந்த பாடல்கள் வெண்பாவிலும், நூற் பாடல்கள் கட்டளைக் கலித்துறையிலும் அமைந்தவை.

தமிழ் நூல் பாடிய பாவலர் பலரும் விநாயகர் காப்புப் பாடியிருக்க, தண்டபாணி சுவாமிகள் முருகனைப் பாடும் அந்தாதி நூலில் முருகனின் வேலாயுதத்திற்குக் காப்புப் பாடியிருக்கிறார். அரக்கத்தை அழித்து விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் காப்பாக அமைந்த வேலாயுதத்திற்குக் காப்புப் பாடியது பொருத்தமுடையதும் பொருளுடையதுமாகும்.

உலகின் ஒரு நாதனாகவும் ஒப்பில்லாக் குருநாதனாகவும் விளங்கும் குருநாதனாகிய முருகனுக்கு அந்தாதி பாடினால் பெருநாதன் என்னும் பெயர் பெற்று இவ்வுலகத்தும் மறுமையுலகத்தும் பெருமை கொள் வாழ்வு பெறலாம் என்கிறார் சுவாமிகள் (காப்பு)

தண்டபாணி சுவாமிகள் முருகப் பெருமானை அருள்தரு கடவுளாக மட்டுமன்றி அறிவுதரு கடவுளாக - குருநாதனாகக் கொண்டவர். முருகப் பெருமான் தன் தந்தை சிவக்கடவுளுக்கு வேதப்பொருளை, பிரணவ மந்திரப் பொருளை உரைவிளக்கம் செய்தவன். அதனால் நாதனுக்குக் குருவான சிவகுரு நாதன் ஆனவன். அவனையே தமக்குக் குருவாகக் கொண்டவர் சுவாமிகள். அவனது அருள் ஞானத்தால் ஆன அறிவு பெற்றவராகவே தம்மைக் கூறுகிறார். கந்தர் அனுபூதியில் அருணகிரி நாதரும், 'குருவாய் வருவாய் அருள் வாய்' என்றார். அருமறையை உபதேசித்த குரு தேசிகனாகிய முருகப் பெருமானைத் தம் அந்தாதிப் பாடல்கள் நூறிலும் 'குருநாதர்' என்றே தண்டபாணி சுவாமிகள் விரித்துப் போற்றுகிறார்.

தண்டபாணி சுவாமிகள் தம் அந்தாதிப் பாடல்கள் அனைத்திலும் முருகனைப் போற்றுதலும் அவனிடத்தில் தமக்கு அருள் வேண்டுதலும் செய்கிறார். அவ்வகையில் ஒவ்வொரு பாடலிலும் தொடக்கத்தில் தம் குறைகூறி வேண்டுதலும், இறுதியில் முருகனின் நிறை கூறி வியத்தலும் செய்வதைக் காணலாம்.

முருகன் அழகானவன், அறிவானவன், ஆற்றலுடையவன். இங்ஙனம் அவனைக் கருதுதற்குரிய காரணம் காட்டியவன். அத்தகைய முருகனின் அருமை பெருமைகளை அடிகளார் பாடிப் பரவுகிறார். தண்டபாணி சுவாமிகள் தம் குருநாதனை, மெய் குருநாதன் (23), கருணைக் குருநாதன் (9), பரமகுருநாதன் (7), பூரண சற்குருநாதன் (16), அருமைக் குருநாதன் (96), ஞானம் தழைத்த குருநாதன் (97), சுந்தரக்குருநாதன் (99) என்றெல்லாம் போற்றி அம்முருகன் 'என் நேயத்தான்' (59), 'என்னை ஆண்டவன்' (69) என்று கூறுகின்றார்.

முருகன், கந்தன், சண்முகன், ஆறுமுகன், குகன் என்றெல்லாம் வழங்கும் ஆயிரத்தொரு நாமங்கள் உடையவன் என்கிறார். சுயம்பாகத் தோன்றிய சிவக்கடவுளின் விழியில் தோன்றிய மைந்தன் அவன். அதனால் அச்சிவத்தின் பாகத்தில் அமர்ந்த உமைக்கும் சேயானவன். இது முருகனின் பிறப்புக்குறித்த புராணவழி வந்த இலக்கிய ஆளுமை பெற்ற செய்தி. இச்செய்தியைத் தண்டபாணி சுவாமிகள் தம் பாடல்களில் பலவிடங்களில் கூறுகின்றார். 'சிவன் விழியில் உத்தமச் சேயென வந்தாய்' (28), 'நஞ்சுண்டோன் பாலன் (14), 'புலித்தோல் உடுத்தோன் கண்' (7), 'உமை பெற்ற சேய்' (12), 'உமையாள் மைந்தன்' (31) எனக் குறிப்பன காட்டத்தக்கன.

முருகனுக்கு என்று தனித்ததோர் உருத்தோற்றம் உண்டு. அவனைப் பாடும் அடியார். 'ஆறுமுகத்தண்ணல்' (6), பன்னிரு தோளும் (70) பன்னிரு கையும் (77) உடையவன், 'சேவற்கொடிக் கையன்' (5), 'கூராரும் வேற் கையன்' (13), தோகை மயில் வாகனன்' (36), 'கடம்பு புனைந்தவன்' (51) என அவன்தன் உருவும் சேர்க்கையும் கூறுகிறார்.

எங்கும் இருக்கும் முருகன் சிறப்பாக மலைமீது நின்று மக்களைக் காப்பவன். அதனால் குறிஞ்சிக்கடவுள் என்று முன்னாளில் குறிக்கப்பட்டவன். தண்டபாணி சுவாமிகளும் முருகனை, 'பல்கோடி வெற்பு ஆள்பவன்' (7), 'மலையில் ஆடும் குருநாதன்' (39), 'குன்று தோறாடிய கூத்தன்' (42), குன்று தோறாடும் குருநாதன் (48) என்றெல்லாம் குறிக்கிறார்.

முருகன் திருமால் மருகன்; விண்ணுலகத்துத் தெய்வப் பெண்ணையும் மண்ணுலகத்து வேடர் பெண்ணையும் மணம் கொண்டவன், 'மாயவன் பரவும் மருகன்' (60), 'சங்கம் ஊதிய மால் மருகன்' (41), 'விண்ணவர் குலசேகரன்' (35), 'குறவள்ளி விழிக்கயலால் மருண்டவன்' (42), 'தினைக்காட்டு வள்ளி தாள் வணங்கும் நாதன்' (60), 'புனத்து ஏனல் வள்ளி நண்ணிய தோட் குருநாதன் (34) எனவரும் பாடலடிகளில் மேற்குறித்த செய்தியினைத் தெரியலாம்.

முருகன், 'என்றென்றும் இளையவன்' (30), 'மூவில் சற்குரு நாதன்' (94), 'முற்றுமான ஞானம் தழைத்தவன்' (97), தந்தைக்கு ஞானம் தந்த நாதன். முருகனின் ஆற்றலையும், அச்சம் கொண்டவர்க்கு அருள் செய்தலையும் காட்டும் முருகனின் செயல், சூரனைக் கொன்று வென்றதாகும். விண்ணவர்க்குப் பகையாய் விளங்கிய சூரனை வேலால் வெற்றி கண்டவன். 'சூழ்வினையை வெல்லும் வேல் கொண்டவன்' அதனால் விண்ணூரையும் விண்ணவரையும் காத்தவன் (26, 37); விண் கொண்ட சோகம் தவிர்த்தவன்.

முருகன் தமிழ்ப் புலவராய் இருந்தவன் என்பது பண்டையோர் குறிப்பு. அக்குறிப்பையும் தண்டபாணி சுவாமிகள் காட்டுகிறார்; 'முச்சங்கத்து நாவலன்' (34), 'பொதியை முனிநாதன் போலும் சிறப்பினன்', 'செந்தமிழ்ச் சொற் பக்தருக்கான குருநாதன் (76), தமிழ்ப்புலவர் குருநாதன் (9, 58), 'குறுமுனி தியானிக்கும் குருநாதன்' (30).

'ஒரு தண்டோடு தோன்றும் தனித்தெய்வம்' (3), 'நாதன் அல்லாத தெய்வம் வேறில்லை' (22), 'தெய்வம் எல்லாம் நின்சீர் வடிவே' (4) என்றிவ்வாறு முருகன் உன்னதமான ஒரு தெய்வம் என்கிறார் தண்டபாணி சுவாமிகள்.

இவை முருகனின் நலமும் திறமும் அறிந்த அடிகளார் குறிக்கும் அவர்தம் அந்தாதி நூலில் அமைந்த செய்திகள். அம்முருகன் தம் மனதிலும் நினைவிலும் நிறைந்தவன்; மனக்காட்சியில் தோற்றம் காட்டியவன். ஆயின் நேர் காட்சியில் நில்லாதவன். அம்முருகன் நேர் வந்து அருள் தந்து குறை நீக்க வருதல் வேண்டும் என வேண்டுவது அவர்தம் அந்தாதிப் பாடல்களின் அடிக்கருத்து.

முருகனைப் படிந்தும் பணிந்தும் வாழ்வு பெற்றோர் அளவற்ற கோடி உண்டு (74); அதற்காகப் பல்வேறு விழிகொண்டவன் முருகன் (8) என்கிறார் சுவாமிகள். அக் கருணை விழிக்கந்தன் தன்னைக் கண்டு கொள்ளாமையைப் பாடல்கள்தோறும் வருந்துகிறார். தம் கடந்தகால வாழ்க்கையின் சிறுமைகளிலிருந்தும் தம் வறுமையிலிருந்தும் விடுபட அருள் தர வேண்டுகிறார்.

செந்தமிழால் பல்லாயிரம் 'திருப்புகழ்' பாடி நின் தாள்பணிந்தேன் (5) நெஞ்சத்தால் நின் மலரடியே வணங்கினேன் (2), என்னை ஆட்கொள்ளாது என் நெஞ்சம் வாடவிடுதல் நீதியில்லை. உன்னையே வாழ்த்தியும் வணங்கியும் திரியும் என்னைப் புன்னெறிக்கு ஏன் விடுத்தாய்?, என்னை வஞ்சம் செய்வதும் ஓரம் செய்வதும் நீதி கொல்?' (1, 6,), 'உன்னைச் செந்தமிழால் புகழ்ந்ததற்குப் பயன் இது சொல்?' (10) என்றெல்லாம் தண்டபாணி சுவாமிகள் பாடுகிறார்.

தமக்கு அருளும், காட்சியும் தாராதிருக்கும் நிலைக்குத் தாம் வருந்துதலைக் கூறும் சுவாமிகள், 'முன்னர் தொழும் அடியார்க்கு அருள்தர இரங்கும் கடவுள் என்று உன்னைச் சொன்னதைப் பொய்யாக்கினாயே' என்கிறார் :

*"பாதங் கருதித் தொழுவார்க் கிரங்கும் பரமகுரு*
*நாதன்என்று உன்னை அறியார்தம் பாற்பொய் நவில வைத்தாய்" (26)*

தமக்கு இறைக் காட்சியும் இறையன்பும் வேண்டும் அடிகளார், அவை பெறாதுபோனால் உலகத்தார் என்னைப் பலவாறு ஏசுவர் என்றும் கூறுகிறார்:

*'பித்தனென்று ஊரவர் ஏசுகின்றார்' (28)*

'பேயன் என்றேச விடலாகுமோ' (49)

*'அகந்தை உள்ளார்க்கு அஞ்கின்ற தறிந்தும் அருள் செய்திலாய்' (10)*

*'வெஞ்சகத்தார் நிந்தை கேட்பதற்கு ஆளென விட்டுவிடேல்' (2)*

என்னும் பாடலடிகள் காட்டத்தக்கன.

கடந்த காலத்தில் கொடியோர் மத்தியில் தாம் வாழ்ந்த வாழ்க்கைத் துயரையும், தம்மை ஆட்கொண்ட காமத் துயர் வாழ்க்கையையும், தம்மை ஆட்கொள்ளாமையால் இப்போதும் அத்துன்பத்தில் ஆழ்ந்து கிடப்பதையும் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

"கொடியோர்கள் வாழ்வது கண்டு எனதுள்ளம் கொதித்தயரும்" *(6)*

"திராக் கயமை உடையோர்தம் முன்றிலில் சென்றலைந்து
பேராண்மை முற்றும் இழந்து இளைத்தேன்" *(13)*

"மங்கையரை நந்தும் அவப்புலை யாட்டில் விடலாமோ" *(91)*

"மோகக் கடலில் குளிக்கின்ற என்னை முதிரருள்சேர்த்து
ஆகத்து அழுந்தவும் கண்டனையே" *(64)*

"மீளாத் துயரக் கடலூடுழல விடுத்தனை' (3)

இறையருளைப் பெறவேண்டித் தாம் அலைந்து திரிந்து அருந்துயரம் அடைந்த நிலையை அழகிய உவமையால் நயம்படக் கூறுதல் காட்டத்தக்கது. ஆனைமீது செல்லும் அரசனிடம் குள்ளன் ஒருவன். அண்ணாந்து பார்த்துச் சுண்ணாம்பு கேட்டது போல் தம் நிலை ஆனதாகக் கூறுகிறார். அவ்வுவமை அமைந்த பாடல் இங்குக் காட்டப்படுகின்றது.

"அண்ணாந்து ஒரு குள்ளன் ஆனையில் ஏகும் அரசனிடம்
சுண்ணாம்பு கேட்டுத் தவித்திடல் போல் உன் தொழும்பு செய்து
தொண்ணாந்து அலைந்து துயரமுற்றேன் புலித்தோல் உடுத்தோன்
கண்ணாம் பரமகுரு நாதனே அருட்காட்சி நல்கே" (7)

முன்னர் முருகன் தமக்கு வரம் தருமாறான காட்சியும் வார்த்தையும் தந்து இப்போது அதனைத் தாராதிருக்கும் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார் சுவாமிகள்.

'ஆதியில் நீசொன்ன சொற்களை நாடி அலமருவேன்' *(84)*

'தூய வெண்ணீற்றணி தோன்றவந்து என்னுடன் சொன்ன சொற்கள்
மாய வுலகில் நிசமாக வேண்டி வருந்தும் என்னை' *(27)*

'வரம் தந்த வண்ணம் பலியாது கண்டு வருத்திவிட்டாய்' *(56)*

என்றெல்லாம் வருந்துகிறார். ஆதலின் சமயங்கள் ஆறிலும் சார்ந்து நின்று உதவி செய்யும் குருநாதன் தன்னை வாடவிட்டு உறங்குதல் நன்றோ? (4) என்றும், 'என் வினை முழுதும் ஒழிக்கும் திறமை உனக்கிலையோ? (99) என்றும், அவன் அருளே கதி என்று எண்ணி அவன் தாள் சுமை வேண்டி இளைக்கும் (48) தம்மை அவன்தன் அடியாரோடு வாழ்வுற வைத்தல் வேண்டும் (60) என்றும் கேட்கிறார்.

முருகப் பெருமானின் திருப்புகழை ஆயிரமாயிரம் பாடல்களில் பாடும் தம்மை அருளால் ஆட்கொண்டு, மெய்ஞானம் ஈந்தருள்தல் வேண்டும் என்ற கருத்தையும் அடிகளார் தெரிவிக்கிறார். அவனையே குருநாதன் என்று ஓர்ந்து கருதும் தன்முன் வந்து ஆர்வம் நல்கத் தாமதம் ஏன்? என்னும் அடிகளார், தமரோடு வந்து தொழும் தம்மை, மயில் வாகனத்தில் மாதர் இருவர் தம்மொடு வந்து ஆண்டருள் (86, 98), ஆடாவது, மயிலாவது, யானையாவது ஏறிவந்து ஆள்

(75) என்கிறார். 'இன்றே என்னை ஆண்டுகொண்டு உடன் அருள் ஏற்றம் நல்கு' என்றும் வேண்டுகின்றார். இங்ஙனம் இறையருட் சித்தம் தமக்கு விரைந்து கிட்டுதல் வேண்டும் என்ற விருப்பினை அவர் வெளிப்படுத்துகின்றார்.

'முருகன் கதிர் வேலோடு வந்து தமக்கு அருளுதல் வேண்டும்' என்னும் அடிகளார், 'சித்தரும் மெச்சத்தகும் வாழ்வில் சேர்த்தருள்க' (76) என்கிறார். 'வேதம் நான்கும் தேடும் சேவடி தந்தருள்க' (15), 'புரந்தரன், வேதன் திருமால் ஒப்போரும் புகழும் நலம் நிரந்தரம் நல்குக' (17), 'சித்தியும் முத்தியும் ஈந்தருள்க( (11) எனக்கேட்கிறார். இங்ஙனம் பாடும் இவ்வடியாரின் பாடல்கள் இவருக்கு முன்னவர்களான மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் போன்றோர் பாடல்களை நினைவுபடுத்துவனவாக அமைதல் தெரியலாம்.

தண்டபாணி சுவாமிகள் பாடிய குருநாதன் அந்தாதி நூல் இலக்கியச் சிறப்புக்களோடும் இலங்குவது. எல்லாப் பாடல்களும் எதுகையோடு அமைந்த இசைக் கட்டுக்குள் அமைந்தவை. உவமை, உருவகம் என்பனவும் பாடல்களில் அமைந்து சிறப்புச் செய்கின்றன.

தாம் பாடிய பாடல்களை உவந்து பல்கோடி வார்த்தைகள் உரைத்த தம் கடவுளைத் தாம் இன்னும் பாடும் பாடல்களைப் புவி முழுவதும் போற்றுமாறு செய்தல் வேண்டும் என்கிறார் சுவாமிகள்.

*"கந்தக் கடம்பு மலர்மாலை போல்என் கவியையும் கொண்டு*
*இந்தக் கடற்புவி முற்றும் புகழும் இயல்பளித்து ஆள்" (83)*

அடிகளார் வணங்கிப் போற்றிய முருகப்பெருமான் அவர்க்கு அருள் தந்து அவர் பாடிய அருட்பா மாலைகளை அவனியெங்கும் தெரிந்திடச் செய்திருக்கிறான் என்பது இப்போது உண்மையாகிறது.

# திருமுறைகளில் வாழ்க்கை முறைகள் (மூவர் தேவாரங்களில் வாழ்வியல் நெறிகள்)

முனைவர் **உ.கருப்பத்தேவன்,**
துறைத் தலைவர் (பெ)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

**முன்னுரை**

"திருமுறைகளில் வாழ்க்கை முறைகள்" என்னும் பொருளில் அமைந்துள்ள இந்த ஆய்வுக் கட்டுரையில், மூவர் தேவாரங்களில் முதல் ஏழு திருமுறைகளில் அமைந்துள்ள வாழ்வியல் நெறிமுறைகள் மட்டும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்து வெளிப்படுத்தப்படுகின்றன.

**பன்னிரு திருமுறைகள்**

| | | |
|---|---|---|
| முதல் மூன்று திருமுறைகள் | - | திருஞானசம்பந்தர் பாடியவை, மொத்தம் 4158 பாடல்கள் |
| நான்கு ஐந்து ஆறாம் திருமுறைகள் | - | திருநாவுக்கரசர் பாடியவை, மொத்தம் 3066 பாடல்கள் |
| ஏழாம் திருமுறை | - | சுந்தரர் பாடியவை, மொத்தம் 1026 பாடல்கள் |
| எட்டாம் திருமுறை | - | மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் |
| ஒன்பதாம் திருமுறை | - | திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேதிராயர், கண்டராதித்தர், பூந்துருத்தி நம்பி காடவ நம்பி, திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, கருவூர்த்தேவர், வேணாட்டடிகள் ஆகிய ஒன்பதுபேர் பாடியவை |
| பத்தாம் திருமுறை | - | திருமூலரின் திருமந்திரம் |
| பதினோராம் திருமுறை | - | திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர், இளம் பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகியோர் பாடியவை. |
| பன்னிரண்டாம் திருமுறை | - | பெரிய புராணம் |

**வைதீக சமய மறுப்பும் சைவ சமய எழுச்சியும்**

சமய, சமுதாய அறிவுமிக்குடைய சேக்கிழார், தாம் இயற்றிய பெரியபுராணத்தில், பிராயச்சித்தம் என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டதால்தான்

எத்தவற்றையும் செய்துவிட்டு அதற்குக் கழுவாய் தேடிக்கொள்ளலாம் என்ற மனநிலையில் வாழ்ந்தபோது அதற்குப் பதிலடி கொடுக்கவே மனுநீதிச் சோழன் வரலாற்றை எடுத்துக் கொள்கின்றார். இந்த வரலாறு சோழ மன்னனைப் பற்றியது; நிகழ்ச்சி திருவாரூரில் நடைபெற்றது. பெரியபுராணத்திற்கு மூலஆதாரமாகிய திருத்தொண்டத்தொகை இயற்றப்பட்டதும் திருவாரூரிலேயே; சிவன், சுந்தரருக்காகப் பரவையார் வீட்டிற்குத் தூதுசென்றதும் திருவாரூரிலேயே; சுந்தரர் வாழ்வு முழுமைபெற உதவிய பரவையார், பதியிலார் குலத்தில் பிறந்ததும் திருவாரூரிலேயே. இவ்வாறு அறத்தின் நாயகனாகிய மனுநீதிச் சோழன் ஆண்ட திருவாரூரில் நம்பியாரூரர் வந்து பயன்பெற்றார்; பரவை நாச்சியார் பிறந்து பயன்பெற்றார். சிவபெருமான் தம் செங்கமலப் பாதம் தேய இவ்வூர்த் தெருக்களில் நடந்தான். இதனைச் சேக்கிழார்,

*"படர்ந்த பேரொளிப் பன்மணி வீதியார்*
*இடர்ந்த ஏனமும் அன்னமுந் தேடுவார்*
*தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்*
*நடந்த செந்தா மரையடி நாறுமால்"*

*(பெரியபுராணம், திருநகரச் சிறப்பு, பா.எண்.6)*

எனப் பாடியுள்ளார். இத்தகைய சிறப்புடைய திருவாரூரை ஆண்ட மனுநீதிச் சோழன் மகன், ஒருநாள் தேரில் நகர்வலம் சென்றான். திடீரென்று இளைய பசுவின் கன்றொன்று தேர்க்காலின் இடைப்புகுந்து இறந்துவிட்டது. இக்கொடுஞ்செயல் தந்தையார் காதில் விழுவதற்குமுன் இளவரசன், 'அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே ஆகில் இயற்றுவேன்' (பெரியபுராணம், திருநகரச் சிறப்பு, பா.எண்.23) என்று அந்தணர்களை நாடிச் செல்கின்றான். அதற்குள் கன்றை இழந்தபசு அரண்மனைக்குச் சென்று ஆராய்ச்சி மணியை அடித்து நீதிகேட்டு நிற்கின்றது. மனுநீதிச் சோழன் நடந்தது அறியாமல் திகைத்து நிற்கின்றான். வேறுவழி இல்லாத நிலையில் அமைச்சருள் வயது முதிர்ந்த ஒருவன் நடந்த நிகழ்வை மன்னனிடம் கூறுகின்றான். இதனைக் கேட்ட மனுநீதிச் சோழன் 'செவ்விதென் செங்கோல் என்று தெருமரும் தெளிவும் தேறான்' என்கின்றான். இதனைக் கேட்ட அமைச்சர்கள் 'அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்' (பெரியபுராணம், திருநகரச் சிறப்பு, பா.எண்.34) என்கின்றனர். அமைச்சர்களின் அறிவுரைகளைக் கேட்ட மன்னவன்,

*"வழக்கென்று நீர் மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்*
*குழக்கன்றை இழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ?"*
*(பெரியபுராணம், திருநகரச் சிறப்பு, பா.எண்.35)*

எனக் கேட்கின்றான். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் பிராயச்சித்தம் செய்வதே முறைமை என்பதை அனைவரும் ஏற்கின்றனர். அரச குமாரன், அமைச்சர், அந்தணர் ஆகியோர் கழுவாய் என்பது அரசகுமாரனுக்கே தவிரப் பசுவுக்கு இல்லை என்பதை மறந்தே பேசுகின்றனர். இந்நிலையில் தமிழ் மன்னனாகிய மனுநீதிச் சோழன் கழுவாய் என்ற ஒன்று கன்றை இழந்து

வருந்தும் தாய்ப்பசுவின் துயரைப் போக்க உதவுமா? எனக் கேட்கும் கேள்விக்கு எவரும் விடை கூற இயலவில்லை. இந்நிலையில் மன்னன் கடமை இவையென மனுநீதிச் சோழன்,

*"மாநிலங் காவலனானவன் மன்னுயிர் காக்குங்காலை*
*தானதனுக் கிடையூறு தன்னால் பரிசனத்தால்*
*ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்*
*ஆனபயம் ஐந்தும் தீர்த் தரசாள்வான் அல்லனோ"*

*(பெரியபுராணம், திருநகரச் சிறப்பு, பா.எண்.36)*

எனக் குறிப்பிடுகின்றான். இதனை மறுத்துப் பேசும் அமைச்சர்களின் அறநூல்கள் கூறும் கழுவாய் நெறியினைக் கேட்டுச் சோழமன்னன் சினம் கொள்கின்றான். அமைச்சர்களுக்கு அறநெறியின் நுணுக்கம் தெரியவில்லை எனக் குறிப்பிடும் மன்னன்,

*"தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம் என*
*அனகன்அரும் பொருள் துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர், அகன்றார்"*

(பெரியபுராணம், திருநகரச் சிறப்பு, பா.எண்.42)

எனக் கூறியதும் அமைச்சர்கள் அஞ்சினர். மனுநீதிச் சோழன் தேர்க்காலில் தன்மகனைக் கிடத்தி அதன்மேல் தேரைச் செலுத்தினான் எனப் பேசுகின்றது பெரியபுராணம்.

திருஞானசம்பந்தர் காலத்தில் வைதிக சமயத்துக்கும், தொல்பழம் சமயமாகிய தமிழ்நாட்டுச் சைவத்திற்கும் இடையே மறைமுகப்போர் நடைபெற்றது. சேக்கிழார் அந்தப் போராட்டத்திற்கு ஒரு வடிவம் கொடுக்கவே 'திருநகரச் சிறப்பு' என்ற பகுதியைத் தாமே தேர்ந்தெடுத்து இந்த வரலாற்றை நுணுக்கமாக உணர்த்தியுள்ளார். வேதம், ஆறங்கம், நீதிநூல்கள் ஆகியன குறித்து ஓயாது பேசிய சம்பந்தர், வாய்ப்புக் கிடைத்ததும் நீதிநூல்கள் கூறும் சாதிவேறுபாட்டைச் சாடுகின்றார். வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள், ஆறு அங்கங்கள் என்பவை சமசுகிருத நெறிப்பட்டவை; கனவிலும் நினையாத விக்ரக வழிபாடு, அபிடேகம், அர்ச்சனை என்பனவற்றுடன் இவை அனைத்தையும் தமிழாலேயே செய்யலாம் என முதன்முதலில் வலியுறுத்தியவர் திருஞானசம்பந்தர். நான்கு வேதங்களை நன்குணர்ந்த வேதியர்களுக்கு மட்டுமே பூணூல் அணிந்த அந்தக் காலத்தில் ஆயிரம் மறைகளை ஓதிக்காட்டி, அவர்களது ஐயங்களையும் போக்கியவர் சம்பந்தர்.

*"அந்தியுள் மந்திரம் அஞ்செலுத்துமே"* (பன்னிரு திருமுறை, *2:22:2*)

எனவும்,

*"வேத நான்கினும் மெய்ப் பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவா யவே"* (பன்னிரு திருமுறை, *3:49:1*)

எனவும் குறிப்பிட்ட துணிவுடையவர் சம்பந்தர். அவர், பல யாகங்களை இயற்றினால்தான் தேவபதவியை அடைய முடியும்; அசுவமேதயாகம் செய்தவனே இந்திர பதவியைப் பெறமுடியும் என்பவர்களிடம் தனது பத்துப்பாட்டையும் பாடுபவர்,

*"வானில் அரசாள்வர் ஆணை நமதே"* *(பன்னிரு திருமுறை, 2:85:11)*

எனவும்,

*"இமையோர் அந்த உலகெய்தி அரசாளும் அதுவே சதம்*
*ஆணை நமதே"* *(பன்னிரு திருமுறை, 3:78:17)*

எனவும் குறிப்பிடும் புரட்சியாளராக அக்காலத்தில் விளங்கியவர் திருஞான சம்பந்தர். ஆதலால்தான் தமிழக வரலாற்றில் அவர் **'திராவிட சிசு'** எனப் போற்றப்படுகின்றார். திருநாவுக்கரசரும்,

*"வேதம் ஓதில் என்? வேள்விகள் செய்யில் என்*
*நீதி நூல்பல நித்தம் பயிற்றில் என்?*
*ஓதி அங்கமோர் ஆறும் உயரிலென்?*
*ஈசனை உள்குவார்க் கன்றி இல்லையே"* *(பன்னிரு திருமுறை, 5:99:3)*

எனக் கடுமையாக வேத வேள்வியைச் சாடியிருக்கின்றார். வைதீக சமயத்தையும் யாகத்தையும் வேள்வியையும் பல்லவர்கள் மிகுதியாக வளர்த்து விட்டனர். அவற்றை மக்கள் நம்பியதால் அறநூல்கள் கூறும் கழுவாய் நெறிமுறை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த காலத்தில் தான் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அவற்றைக் கண்டித்தனர்.

"பிற சமயத்தில் (சமணம்) பலகாலம் இருந்து சைவம் திரும்பிய திருநாவுக்கரசர் எவ்விதப் பிராயச்சித்தமும் செய்து கொள்ளாமல், தன் சகோதரி திலகவதியார் அளித்த திருநீற்றை அணிந்து கொண்டு, பெருவாழ்வு வந்ததாக எண்ணி அப்படியே திருக்கோயில் சென்றுவிட்டார் என்று பாடுகின்றார் சேக்கிழார்" (பெரியபுராணம், திருநாவுக்கரசர் புராணம், பா.எண்.67)

இத்தகைய காலப்பின்னணியில்தான் சுந்தரர், சிவவேதியர் குலத்தில் தோன்றி வைதீகச் சிந்தனைகளை அப்படியே ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதற்குத் துணையாக சிவனையே வைத்துக் கொள்கின்றார். தேவதாசியர் குலத்தில் பிறந்த பரவைநாச்சியாரைத் திருவாரூர் அந்தணர்கள், சுந்தரமூர்த்திக்குத் திருமணம் செய்து வைப்பதும், அவர் மாப்பிள்ளைக் கோலத்துடன் இராஜபோகமான வாழ்க்கையை வாழ்வதும் அவர் செய்த சமூகப் புரட்சியின் வெளிப்பாடாகும். சைவ வேதியராகிய அவரும் "நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" (பன்னிரு திருமுறை, 7:48:110) என்று பாடிச் செல்கின்றார். அன்று பெருவழக்காக இருந்த வைதீக சமயத்தைச் சம்பந்தரும் நாவுக்கரசரும் ஆரவாரமின்றி எதிர்த்துப் புரட்சிசெய்தனர். அவர்கள் தொல்பழம் சமயமாகிய சைவத்தின் வழிப்பட்ட சிவவழிபாடு, அபிடேகம், அர்ச்சனை, தமிழில் வழிபாடு ஆகியனவற்றை நிலைநாட்டினர். இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் சேக்கிழார் தம் நோக்கத்தை அழுத்தமாகப் பதிவுசெய்வதற்கே மனுநீதிச் சோழன் கதையைப் பயன்படுத்தியுள்ளார்.

வைதீகர்கள், 'மனிதனே உயர்ந்தவன்' என்னும் கருத்துடையவர்கள். மனிதர்கள், அவர்களுடைய நன்மை, தீமைகளுக்காக விலங்குகளைப் பலியிடலாம் என்னும் கொள்கையுடையவர்கள். அவர்கள் தம் சொந்த நன்மைகளுக்காகவே விலங்குகளைப் பலியிட்டு வேள்விகளையும் யாகங்களையும் செய்தனர். இதனால்தான் கௌதமபுத்தர் வேதம்,

வேள்விகளைக் கடுமையாகச் சாடினார் என்பதும் இவண் ஒப்புநோக்கிச் சிந்திக்கலாம்.

**வைதீக சமய எதிர்ப்பின் அரசியல் பின்புலம்**

திருஞான சம்பந்தர், சமணம் முதலான புறச் சமயங்களையும், வைதீகச் சமயத்தையும் எதிர்த்துப் போர்க்கொடி தூக்கினார். அதன் வளர்நிலை சுந்தரர் காலத்திலும் தொடர்ந்தது. "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்" (பன்னிரு திருமுறை, 7:62:8) என்று சம்பந்தர் தமிழுடன் தம்மை உட்படுத்தி ஓயாது அதனை வெளிப்படுத்தி வந்ததன் உட்கிடை சுந்தரருக்கு நன்கு புரிந்திருக்கவேண்டும். இதனால்தான் சுந்தரரும் தன்னைத் தமிழுடன் இணைத்தே வெளிப்படுத்திக் கொள்கின்றார். "ஆரூரன் அருந்தமிழ்" (பன்னிரு திருமுறை, 7:9:11), "ஆரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள்" (பன்னிரு திருமுறை, 7:53:10) என்பன இதற்குத் தக்க சான்றுகள் ஆகும். சுந்தரர் ஆதிசைவர் என்பதால் வேதம், வேள்வி ஆகியனவற்றை ஒன்றிரண்டு இடங்களில் கூறுவது உண்மையே. அவருடைய காலத்தில் பல்லவர்கள் தமிழை ஆதரிக்கத் தொடங்கினர். ஆயினும் அவர்கள் தமிழர் அல்லாதவர் என்பதால் சம்பந்தரும் சுந்தரரும் பல்லவர்கள் ஆட்சியை ஏற்கவில்லை.

"வரலாற்று அடிப்படையில் காண்பதானால் சம்பந்தரும் நம்பியாரூரரும் அந்தணர்கள். ஆனால் அன்று வாழ்ந்திருந்த வேத வழக்கொடுபட்ட வைதிகப் பிராமணர்கள், கவுண்டின்ய கோத்திரத்தாராய ஞானசம்பந்தரையும், சிவவேதியராகிய நம்பியாரூரரையும் பிராமணர்கள் என்று ஏற்றுக் கொண்டிருப்பார்களா? என்பதும் ஐயத்திற்குரியதே. தமிழகத்தில் ஆதியிலிருந்து வாழ்ந்த அந்தணர்கள் இவர்களைச் சேர்ந்தவர்களே; எனினும் பல்லவர்களால் இறக்குமதி செய்யப்பட்டுப் பலவிடங்களிலும் குடியேற்றப்பெற்ற பரத்வாஜ கோத்திர அந்தணர்கள் சிலராவது பழைய வேத வேள்விகளை ஏற்றுக்கொண்டு அந்த அந்தணர்களுடன் உறவாட முனைந்திருக்க வேண்டும். அந் நிலையில்தான் இரு அந்தணர்களும் (ஞானசம்பந்தரும் நம்பியாரூரரும்) தமிழுடன் தங்களைத் தாங்களே தொடர்புபடுத்திக் கொண்டு இறைவனைப் பாடியிருத்தல் வேண்டும். சம்பந்தர் தேவாரத்தைப் படிப்போர்க்கு அவருடைய திருக்கடைக்காப்பில் 95 சதவிகிதம் தம்மைத் தமிழுடன் தொடர்புபடுத்திக் கூறுவது வியப்பைத் தராமல் இராது.

தமிழை ஏற்காமலும், இறைவனுக்குப் பூசனை புரிவதற்குத் தமிழ் தகுதியற்றது என்றும், வேள்வி முதலியன செய்தவர்கள் தமிழைப் போற்றிக் கற்க வேண்டியதில்லை என்றும் கூறும் கூட்டம் ஒன்று அரசியல் வலுவுடன் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும். அவர்கள் வாயை அடைத்து வடமொழி வேதத்துக்கும் தமிழ்மறைக்கும் வேறுபாடில்லை என்பதைச் சுட்டவே சம்பந்தர் முயன்றிருக்கிறார்" (அ.ச.ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.277) என்று அ.ச.ஞானசம்பந்தன் குறிப்பிடுவது ஏற்புடையதே. இதனை உணர்ந்தே சேக்கிழார், "எழுதுமா மறையாம் பதிகத்திசை" (பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், பா.எண்.375), "வேதம் தமிழால் விரித்தார்" (மேலது, பா.எண். 229) எனப்பாடியுள்ளார். திருநீலகண்ட யாழ்ப்பாணரை

அவருடைய மனைவியாருடன் உடன் அழைத்துச் சென்றதும், அவர்கள் யாழ்வாசிக்கும்போது செய்த சமுதாயப் புரட்சியும் அந்தணர்களுக்கு அதிர்ச்சியைத் தந்திருக்க வேண்டும்.

நாவுக்கரசர் சமணர்களிடம் அகப்பட்டுக் கொண்டு பெருந்துன்பங்களுக்கு ஆட்பட்டவர். ஆதலால்தான் சம்பந்தரை மதுரைக்கு வரவேண்டுமென்று மங்கையர்க்கரசியால் அனுப்பட்டவர்கள் வேண்டியபோது, நாவுக்கரசர் நடந்து கொள்ளும்முறை குழந்தையைக் காக்கும் தாயன்பை நினைவூட்டுகின்றது.

**வைதீகரும் ஆகமபூசையும்**

தலைசிறந்த முதல் வேதமாகிய இருக்குவேதத்தில் இல்லாமல், கிருஷ்ணயஜுர் வேதத்தில் தைத்ரிய ஸம்ஹிதையில் நாலாவது காண்டத்தில், ஐந்தாவது பிரபாடகமாக வரும் உருத்திரம் "அருமறைப் பயனாகிய உருத்திரம்" என்று பேசப்படுகின்றது. வேதங்கள் நான்கினும் தலையாயது இருக்கு. ஆயினும் அதில் இடம்பெறாத உருத்திரத்தை 'அருமறைப் பயனாகிய' எனக் குறிப்பிடுவதால், சிவவழிபாட்டை முதன்மையானதாகக் கொண்ட தென்னாட்டு வேதியர் கருத்து இதுவெனக் கொள்ளலாம். சண்டேசர் தோன்றிய சேய்ஞ்ஞலூரையும் அதில் வாழ்ந்த வேதியர்களையும் சுட்டும்போது சேக்கிழார்,

*"செம்மை வெண்ணீற்று ஒருமையினர்*
*இரண்டு பிறப்பின் சிறப்பினார்"*

**(பெரியபுராணம், சண்டேசுர நாயனார் புராணம், பா.எண்.2)**

என்னும் முறையில் பாடுகின்றார். இதுவரையில் வைதிக வேதியர்கள் பற்றிய விளக்கங்களைத் தந்த சேக்கிழார், திருநீலநக்கர் பற்றிப் பாடும்போது குழப்பம் ஏற்படுகின்றது.

*"ஆய்ந்த மெய்ப்பொருள் நீறுஎன வளர்க்கும் அக்காப்பில்*
*ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளார் இரு பிறப்பாளர்"*

**(பெரிய புராணம், திருநீலக்க நாயனார் புராணம், பா.எண்.3)**

எனத் திருநீலநக்கர் பிறந்த குடியைக் கூறிவிட்டு,

*"தூய தொண்டனார் தொல்லைநீடு அயவந்தி அமர்ந்த*
*நாயனாரையும் அருச்சனை புரிந்திட நயந்தார்"* **(மேலது, பா.எண்.6)**

எனப்பாடி அயவந்தி என்ற பெயருடன் விளங்கும் திருக்கோவில் சென்று இறைவனைப் பூசை செய்ய விரும்பினார் என்கின்றார். அவர் பூசை முறையை

*"நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பார்*
*நாடும் அஞ்செழுத்து உணர்வுற இருந்துமுன் நவின்றார்"*

**(மேலது, பா.எண்.10)**

என்று குறிப்பிடுவது வியப்பைத் தருகின்றது. இவர் ஆதிசைவர் அல்லர்; வைதீக அந்தணர் என்பதையும் குறிப்பிடும் சேக்கிழார் திடீரென்று ஆகம விதிப்படி நாள்தோறும் கோயில் பூசை செய்தார் என்று குறிப்பிட்டிருப்பது புதுமையானதாகும். வைதீக அந்தணர் பற்றிய எந்த வரலாற்றிலும் ஆகமவிதியைப் பின்பற்றித் திருக்கோயிலில் பூசை செய்ததாகக்

குறிப்பிடப்படவே இல்லை என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும். திருஞான சம்பந்தர் புராணத்தில்கூட இது இடம்பெறவில்லை. ஸ்ரீருத்ரம் சொல்லும் உருத்திர பசுபதியாரைக்கூடக் கோயில் பூசை செய்ததாகக் குறிப்பிடாத சேக்கிழார் இந்த வரலாற்றில் மட்டும் திருநீலநக்கர், வீட்டில் முத்தீ வளர்ப்பவராகிய இவர், ஆகமவிதிப்படி பூசைசெய்தார் என்று கூறுவது எப்படி என்பதைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

திருநீலநக்கர், ஞானசம்பந்தர் சமகாலத்தவர். அவரைத் தம் வீட்டில் வரவழைத்து விருந்தோம்பியவர். சம்பந்தர் காலத்தில் ஆகமநெறிப் பட்ட பூசைமுறை இருந்தது. ஆயினும் சிவவேதியர் அல்லாத வைதிக வேதியர் கோயில் பூசை செய்தார் என்பது சிக்கலான ஒன்றாகவே கருதப்படுகின்றது.

*"தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்*
*வகுத்தவன் வளர்பொழில் கூகம் மேவினான்"*

*(பன்னிரு திருமுறை, 2:23:26)*

*"திறம்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே*
*அறம்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமரும் இடம்"*

*(பன்னிரு திருமுறை, 2:43:46)*

என்னும் குறிப்புக்கள் சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகின்றன.

*"ஆகமம் சொல்லும் தன் பாங்கிக்கே"* *(பன்னிரு திருமுறை, 5:15:4)*

*"அண்டர் தமக்கு ஆகமநூல் மொழியும் ஓதியே"*

*(பன்னிரு திருமுறை, 7:84:8)*

*"அம்மானே! ஆகம சீலர்க்கு அருள்நல்கும் பெம்மானே"*

*(பன்னிரு திருமுறை, 7:96:6)*

*"அரவொலி, ஆகமங்கள், தோத்திரங்கள்"* *(பன்னிரு திருமுறை, 7:100:8)*

எனக் கூறப்படுபனவற்றுள் ஒன்றுமட்டும் நாவுக்கரசர் வாக்காகும். ஏனைய மூன்றும் சுந்தரர் வாய்மொழியாகும். நாவுக்கரசரும் சம்பந்தரும் போகின்ற போக்கில் உமைக்கு ஆகமம் சொன்னார், ஆகம் வகுத்தார் என்றுமட்டும் கூறிச் செல்கின்றனர். இந்த இருவருக்கும் இரண்டு நூற்றாண்டுகள் கழித்துவரும் சுந்தரர், ஆதிசைவர் ஆதலின் மூன்று இடங்களில் ஆகமத்தைப் பற்றிப் பேசியுள்ளார்.

திருநீலநக்கர் அயவந்திப் பெருமானை முறைப்படி வழிபடத் தொடங்கும்போது அவருடைய மனைவி பக்கத்திலேயே உடன் நின்று உதவி புரிகின்றார். திருமேனிமேல் சிலந்தி விழுந்ததும் அதனை ஊதிப் போக்கும் அளவுக்கு அப்பெண்மணி அருகாமையில் நின்றதாகச் சேக்கிழார் பாடியுள்ளார். ஒரு பெண்மணி கருவறையில் நின்று பூசைக்கு உதவுவதை எந்த ஆகமமும் அனுமதிக்கவில்லை. ஆச்சார்ய அபிசேகம் செய்யப்பெற்ற சிவவேதியரைத் தவிர ஏனைய வைதிகர்களும், சிவவேதியர் குடிப்பிறந்த பெண்களும் அர்த்த மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை. எவ்வாறாயினும் திருநீலநக்கர், சிவவேதியரல்லர்; எனவே அவர் அயவந்திக் கோயிலினுள் சென்று ஆகமம் மறுக்கும் உரிமையைத் தம் மனைவிக்குத் தந்துவிட்டார் எனக் கொண்டால்

இவ்விருவரையும் மிகப்பெரும் புரட்சியாளர் எனக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த வளர்ச்சியும் மாற்றமும் பெற்றன எனக் கொள்ள வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் இணைத்து நோக்கும்போது கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஒரு குழப்பமான காலப்பகுதியாக இருந்திருக்க வேண்டுமெனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

வைதீகர், வேதங்களைக் கற்றவராயினும் தமிழகத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தமையால் பின்னர் ஆகமங்களையும் ஏற்றுக்கொண்டு சிவனையே பரம்பொருளாக ஏற்றுக்கொண்டு, ஐந்தெழுத்தையே மாபெரும் சக்தி வாய்ந்த மந்திரமாகப் போற்றி வாழ்ந்தார்கள் என்றும், ஆதிசைவர் வைதிகர் ஒருங்கிணைப்பு முயற்சி என்றும் கொள்ளலாம்.

**தமிழ்நாட்டு மரபை உடைத்தல்**

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டே சில மரபுகள் விடாமல் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. ஒருபெண் வளமான பெரிய இடத்தில் பிறந்தவளாயினும் அவளுக்குத் திருமணமான பின்னர், அவள் புகுந்த இடம் வறுமையுற்ற சாதாரணக் குடியாயினும் மணந்தவன் பெயருடன் அவள் பெயரும் தொடர்புபடுத்திப் பேசப்படுமே தவிர, தந்தையின் பெயருடன் மணமான பெண்ணின் பெயர் சார்த்திப் பேசப்படும் மரபு தமிழ்நாட்டில் தமிழ்ப்பண்பாட்டில் இல்லை. மங்கையர்க்கரசியார் சோழ மன்னன் மகளாயினும் நின்றசீர் நெடுமாறன் என்ற பெருவீரனாகிய பாண்டிய மன்னனின் மனைவியாவாள். அம்மன்னன் சமணத்தைச் சார்ந்து நின்றவன். சிவபக்தையாகிய மங்கையர்க்கரசி அவனை மணக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. சோழன் பெயரளவில் மட்டுமே மன்னனாக இருந்தான். எனவே சமணனாகிய பாண்டிய மன்னன் தன் மகளைக் கேட்ட அளவிலேயே அவனுக்கு மணம் செய்தும் கொடுத்துவிட்டான். இது அரசியல் அடிப்படையில் நிகழ்ந்த திருமணமாகும்.

சோழமன்னனும் அவன் மகளாகிய மங்கையர்க்கரசியும் பாண்டிய நாட்டின் தலைமை அமைச்சன் குலச்சிறையாரும் சிவபக்தர்கள். அது குறித்துப் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் கவலைப்படவில்லை. அவர்கள் சிவவழிபாட்டிற்கும் பாண்டிய மன்னன் தடை விதிக்கவில்லை. மன்னன் சமணன்; மங்கையர்க்கரசி (மனைவி) சிவபக்தை; ஆயினும் எவ்வித மனவேறுபாடும் இல்லாமல் அவர்கள் இல்வாழ்க்கை செல்கின்றது. இருப்பினும் சேக்கிழார் மங்கையர்க்கரசியைக் குறிப்பிடும் இடங்களில் 'சோழன் மகள்' என்றே குறிப்பிடுகின்றார்.

அமைச்சர் குலச்சிறையார், சம்பந்தரை எதிர்கொள்ளச் செல்கின்றார். அவரது தொண்டர் கூட்டத்தைக் கண்டதும் கீழே விழுந்து வணங்கியவர் எழுந்திருக்கவே இல்லை. சம்பந்தர், வணங்குபவர் பாண்டிய நாட்டின் தலைமை அமைச்சர் என அறிந்தவுடன் சிவிகையிலிருந்து இறங்கி வந்து குலச்சிறையாரைத் தூக்கி நிறுத்தி அவருடன் உரையாடுவதாகக் கூறும் சேக்கிழார்,

**"செம்பியர் பெருமான் குலமகளார்க்கும்**
**திருந்திய சிந்தையீர் உமக்கும்**

*நம்பெருமான் தன்திருவருள் பெருகும் நன்மை வாலிதே"*

*(பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், பா.எண்.658)*

என்று சம்பந்தர் கூறியதாகப்பாடுகின்றார். மதுரைக்குள் வந்து ஆலவாய் இறைவனின் திருக்கோயிலினுள் நுழைந்த சம்பந்தரை மங்கையர்க்கரசியார் கண்டு கீழே விழுந்து வணங்குகின்றார். அவளைப் பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியார் என்று சம்பந்தருக்குக் குலச்சிறையார் அறிமுகப்படுத்து வதாகக் குறிப்பிடும் சேக்கிழார் "பருங்கை யானைவாழ் வளவர்கோன் பாவையார்" (மேலது, பா.எண்.670) என்றே அறிமுகம் செய்து வைப்பதாகக் குறிப்பிடுகின்றார். இவ்விரண்டு இடங்களில் பாண்டிய மன்னன் மனைவியாகிய மங்கையர்க்கரசியைப் பாண்டிமாதேவி எனக் குறிப்பிடாமல் சோழன்மகள் எனக் குறிப்பிடுவது மரபு கடந்த செயலாகும். இந்த மரபு மீறலுக்கு வழிகாட்டியவர் சம்பந்தரே; அவர் கருத்துப்படி அங்கயற்கண்ணி ஆட்சிபுரியும் மதுரையில் அவள் அருளால் ஆட்சி செய்யும் பாண்டிய மன்னன் தமிழனாக இருந்தால் அவன் சைவனாகத்தான் இருக்க வேண்டும். களப்பிரரை முதலில் வென்று தமிழ் நாட்டின் தென்பகுதியை மீட்டவன் பாண்டியனே; ஆயினும் மீட்கப்பட்ட தமிழ்நாட்டில் சமணத்தை நுழையவிட்டவன் நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னனே; எனவே அவன் தவறு செய்திருப்பினும் மங்கையர்க் கரசியாரை மணந்து, அவள் சைவராக வாழ்வதற்கும் இடம்கொடுத்தவன்; ஆதலால்தான் சம்பந்தர் மதுரைக்கு வர ஒப்புக் கொள்கின்றார்.

சம்பந்தர் பிறப்பின் நோக்கமே சமணசமயத்தைத் தமிழ்நாட்டிலிருந்து ஓட்ட வேண்டும் என்பதே; எத்தகைய மனிதரையும் அவர் சிவனடியாராக இல்லையெனில் அவரைத் தம் பாடலால் வைத்துப் பாடாதவர் சம்பந்தர். அவர் மங்கையர்க்கரசியாரைக் குறித்து ஒரு முழுப்பதிகமே பாடியிருக்கின்றார். ஆலவாய்ச் சொக்கன் அங்கயற்கண்ணியோடு மதுரையிலிருந்ததற்கு மங்கையர்க்கரசியாரே காரணமாக இருந்தாள். எனவேதான் சம்பந்தர் அவளது பெருந்தொண்டினைச் சிறப்பிக்கும் வகையில்,

*"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை*
*வரிவளைக் கைம்மட மானிட*
*பங்கயச் செல்வி பாண்டிமாதேவி*
*பணிசெய்து நாடொறும் பரவ*
*பொங்கழல் உருவன் பூதநாயகனால்*
*வேதமும் பொருள்களும் அருளி*
*அங்கையற்கண்ணி தன்னொடும் அமர்ந்த*
*ஆலவாய் ஆவதும் இதுவே"* *(பன்னிரு திருமுறை, 3:120:1)*

என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடியுள்ளார். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் மாறிமாறி மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும் புகழ்ந்துள்ளார்.

*"மண்ணெலாம் திகழ மன்னனாய் மன்னும்*
*பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி"* *(பன்னிரு திருமுறை, 3:120:9)*

எனப்பாடியுள்ளார் சம்பந்தர். மங்கையர்க்கரசியாரைக் குறிப்பிடும்போது 'சோழன் மகள்' என முதலில் சுட்டி, இறுதியில் பாண்டிமாதேவி என்று குறிப்பிடுகின்றார் அவர். நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் செய்த தவறுக்காக அவன் மாபெரும் வீரனாக இருந்தும், தமிழ்நாடு முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆட்சி செய்த அவன்பெயரை முதலில் குறிப்பிடச் சம்பந்தர் விரும்பவில்லை. இத்தகைய தவற்றைச் செய்யாத சோழனை அவன் சிற்றரசனாக இருந்தபோதும், மங்கையர்க்கரசியாரை மகளாகப் பெறும்பேறு பெற்றமையால் அவனைச் சிறப்பித்து அவன் பெயரை முதலில் குறிப்பிட்டார் சம்பந்தர். இதனால்தான் சேக்கிழாரும் சம்பந்தரைப் பின்பற்றி மரபுபற்றிக் கவலைப்படாமல் பாடியுள்ளார்.

**அனைத்துச் சமயமும் ஒன்றே; அனைத்துக் கடவுளரும் ஒருவரே**

தமிழ்ச் சமுதாயத்தில் வேற்றுமையென்பது ஆயிரம் காலத்து வயிரம் பாய்ந்த மரமாகத் திருநாவுக்கரசர் காலத்தில் வளர்ந்து நின்றது. அது சமயம், சாதிகள் சார்ந்ததாக இருந்தது. பண்டைய மக்கள், கண்ணால் கண்டவற்றையெல்லாம் 'கடவுள்' என நம்பி வணங்கி வழிபட்டு வந்தனர். தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுபனவற்றையெல்லாம் 'தெய்வங்கள்' என்றும், அச்சம் தரும் நிகழ்ச்சிகளை எல்லாம் 'தெய்வச் செயல்கள்" எனவும் நினைத்தனர். மக்கள் இந்நிலையில் வாழ்ந்த காலத்தில் அவர்கள் பல தெய்வங்களை வணங்கினர். தீ, காற்று, நீர், நிலம், ஆகாயம் ஆகியனவற்றையும் தெய்வங்கள் என நம்பினர். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மழை, இடி, மின்னல் போன்ற அனைத்தையும் தெய்வங்களாகவே நினைத்தனர். தொடக்க காலத்தில் அனைத்து நாட்டு மக்களும் இந்நிலையில்தான் இருந்தனர்.

நாளடைவில்தான் சான்றோர்களும் அறிஞர்களும் கண்ணுக்குப் புலப்படாமல் எல்லாம் வல்ல சக்தியொன்று மறைந்திருப்பதாகக் கூறினர்; அதை மனத்தாலும் எண்ணமுடியாது; வாக்காலும் சொல்ல முடியாது என்றனர். இத்தகைய எல்லாம் வல்ல சக்திக்கு அவர்கள் மனம்போன போக்கில் கடவுள், ஆண்டவன், இறைவன், தலைவன், சிவன், திருமால், நான்முகன், கர்த்தர், அல்லா என்றவாறு பல பெயர்களை இட்டனர். இந்நிலையில் ஒவ்வொரு வரும் தங்கள் ஆண்டவனே உயர்ந்தவன் எனக் கருதிய நிலையில் அடிக்கடி சமயச் சண்டைகள் நடைபெற்று வந்தன. இவ்வாறு இறைக்கொள்கை காரணமாக ஒவ்வொரு நாட்டிலும் பலப்பல சண்டைகள் நடந்திருக்கின்றன. கடவுளின் பெயராலும் சமயங்களின் பெயராலும் நடைபெற்ற பூசலால் தனித்தனியாகப் பிரிந்து சின்னாபின்னமுற்றனர். இது இறைத்தத்துவத்தை உணராமையால் நிகழ்ந்தனவாகும்.

'கடவுள் ஒருவரே; பல கடவுளர்கள் இல்லை'. அந்த ஒரே கடவுள்தான் தன் நினைப்பு வல்லமையினால் உலகைப் படைத்திருக்கின்றார். அந்த ஒரே கடவுள்தான் பல வடிவங்களில் காட்சி தருகின்றார்; பல செயல்களைச் செய்து வருகின்றார். சிறப்பாகப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களைச் செய்து வருகின்றார். இதுவே இறைத்தத்துவமாகும்.

இந்த உண்மையை அறிந்திருப்பதோடு, இதை நம்புகின்றவர்களே உண்மையான இறையன்பர்கள் ஆவர்; அவர்கள் மற்றவர்களை வெறுக்க

மாட்டார்கள்; கடவுள் மற்றும் சமய வேற்றுமை காரணமாகப் பிறருடன் சண்டையிடவும் மாட்டார்கள். உண்மையான இறையடியார்கள், பிற சமயத்தினரிடம் வெறுப்புக்கொள்ள மாட்டார்கள். இந்த உண்மையை ஆழ்வார்களும் நாயன்மார்களும் நுணுக்கமாக அறிந்திருந்தனர். இதனை நாவுக்கரசர் தம் தேவாரப்பாடல்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

*"நாதனாய், உலகம் எல்லாம் நம்பிரான் எனவும் நின்ற*
*பாதனாம், பரமயோகி பலப்பல திறத்தினாலும்*
*பேதனாய் தோன்றினானைப் பெருவேளூர் பேணினானை*
*ஓதநாவுடையன் ஆகி உரைக்குமாறு உரைக்கின்றேன்"*

*(திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பெருவேளூர்த் திருநேரிசையிலுள்ள பாடல்)*

என்னும் நாவுக்கரசர் பாடல் உலகமெல்லாம் ஒரே கடவுள்தான் நிறைந்திருக்கின்றான் என்னும் சிந்தனையை எடுத்துக்காட்டுகின்றது. இப்பாடல் இறைவன் ஒருவனே; அவனே எல்லாவிடங்களிலும் நிறைந்து, பல்வேறு வடிவங்களில் காட்சி தருகின்றான் என்ற உண்மையை வலியுறுத்திக் கூறுகின்றது. இக்கருத்தை நாவுக்கரசர் பின்வரும் தேவாரப் பாடலிலும் அழுத்தமாக வலியுறுத்திக் கூறுகின்றார்.

*"விரிவிலா அறிவினார்கள் வேறுஒரு சமயம் செய்து*
*எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றது ஆகும்"*

*(திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பெருவேளூர்த் திருநேரிசையிலுள்ள பாடல்)*

இவ்வாறு நாவுக்கரசர், அனைத்துச் சமயங்களும் இறைவனுக்கு ஏற்புடைய சமயங்களே; அனைத்துக் கடவுளர்களும் ஒரே கடவுளின் பல்வேறு தோற்றங்களே என்னும் உண்மையைக் கூறிச் சமயவொற்றுமையை வலியுறுத்திக் கூறியிருப்பது சிந்தனைக்குரியதாகும். இதுவே தமிழர் கண்ட உண்மையான சமயநெறியும், சைவம் கண்ட சமரச சன்மார்க்கம் சார்ந்த வாழ்வியல் நெறியுமாகும்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**



| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

# இல்லறக்கிழத்தி மாண்புகள்

செந்தமிழ் தொகுதி எண்.44
பகுதி:6 ஏப்ரல் - மே, 1947ல் வெளிவந்தவை

சி.கணேசையர்

இல்லறக்கிழத்தி என்றது இல்லறத்துக்குரியாளை. இல்லறமெனினும் மனையறமெனினும் ஒக்கும். ஒருவன் தன் மனையிலிருந்து அறஞ்செய்தற்குத் துணையாமுரிமை பூண்டவள் தான் மணஞ்செய்துகொண்டவளேயாதலின் அவள் இல்லறக்கிழத்தி எனப்படுவாள். இல்லிலிருந்து அறஞ்செய்து வாழ்தற்குத் துணையாதலின் அவள் வாழ்க்கைத்துணை எனவும்படுவாள். அவட்குரிய மாண்புகளாவன: நற்குண நற்செய்கைகள். அவைகளையே வள்ளுவரும்,

*"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"*

என்னும் குறளில் மனைத் தக்கமாண்பு என்று சிறப்பித்துக்கூறினார். அம் மாண்பு 'நற்குண நற்செய்கைகள்' என்றும், 'நற்குணங்களாவன: துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும் வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின' என்றும், 'நற்செய்கைகளாவன: வாழ்க்கைக்குவேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும் அட்டிற்றொழில்வன்மையும் ஒப்புரவு செய்தலும் முதலாயின' என்றும் அக்குறட்கு உரைகண்ட பரிமேலழகரும் வரைதல் காண்க. இம்மாண்பு களையே தொல்காப்பியர்,

*"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்*
*மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்துபுறந் தருதலும் சுற்ற மோம்பலும்*
*பிறவு மன்ன கிழவோண் மாண்புகள்"*

என்று எடுத்துக்கூறினார். இம்மாண்புகளை இங்கே விளக்கி, இம்மாண்புகள் யாவும் கோவலன்மனையாளாகிய கண்ணகிபால் அமைந்து கிடந்தமையை இளங்கோவடிகளாற் செய்யப்பட்ட சிலப்பதிகாரச் செய்யுளினின்றும் எடுத்துக் காட்டலாகும்.

கற்பென்பது ஒருத்தி தான் இல்வாழ்க்கைப்படுமுன் தந்தை தாயரும், இல்வாழ்க்கைப்படும்போது (அஃதாவது கரணமொடு புணருங்காலத்து) ஆசானும், இல்வாழ்க்கைப்பட்டபின் கணவனும் கற்பித்தமுறைப்படி ஒழுகுவது என்றவாறு, அதுவே பொருளாதல், - தொல்காப்பியர் கூறிய,

*"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"*

என்னும் சூத்திரவுரையுள் நச்சினார்க்கினியர், "கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுதுகுரவர் (தந்தை தாயர்) கற்பித்தலானும், அந்தணர் திறத்தும் சான்றோர்தேஎத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைவன் கற்பித்தலானும் கற்பாயிற்று" என்றும், "இவளை இன்னவாறு பாதுகாப்பாய் எனவும் இவற்கு இன்னவாறு குற்றேவல் செய்தொழுகுவாய் எனவும் (முறையே தலைவனுக்கும் தலைவிக்கும்) ஆசான் கற்பிக்கப்படுதலிற் ... .... கற்பென்றார்" என்றும் கூறுதலானும் அறிந்து கொள்க. கணவன் சொல்லைக் கடவாமல் நடப்பதே கற்பென்னும் பொருள்படக் 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று ஔவையாரும் கூறுதல் காண்க. கணவனை வழிபட்டொழுகும் ஒரு பெண்ணுக்கு அக்கற்பு யாவரும் மதிக்கும் பெருமையையும் தெய்வ ஆற்றலையும் கொடுக்கும். திருவள்ளுவரும்,

*"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்"*

என்றும்,

*"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"*

என்றும் கூறுதல் காண்க.

இக்கற்புக் கண்ணகிபாற் பொருந்தியிருந்தமையைத் தன் கணவனாகிய கோவலன் மாதவிபாற் பிரிந்தொழுகியகாலத்து, அவன்பிரிவாலாயதுயரைத் தன் நிறையான் மறைத்துக்கொண்டு அவனை வெறாது வழிபட்டொழுகினமை யானும், அவ்வொழுக்கானே மதுரையை எரித்தமையானும், மதுரையை எரித்தபின் மலைநாடுசென்று, அங்குள்ள திருச்செங்குன்று என்னும் மலையிலேறி, அம்மலையின்மேல் ஒரு வேங்கைமரத்தின் நிழலிலேநின்று, பதினான்காவது தினத்தின் பகல்சென்றபின் தெய்வவடிவோடு வந்த கோவலனோடு விமானத்திலேறிச் சுவர்க்கம்புக் கமையானும் அறிந்து கொள்க. இளங்கோவடிகளும்,

*"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்*
*தெய்வம் தொழுந்தகைமை திண்ணமால் - தெய்வமாய்*
*மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி*
*விண்ணக மாதர்க்கு விருந்து"*

என்னுஞ் செய்யுளானே, கண்ணகி தான் கணவனைத் தொழுதொழுகிய கற்பால் தெய்வமாகிச் சுவர்க்கம்புக்காள் என்று கூறுதல் காண்க.

இனிக் காமம் என்பது கணவன்மேல்வைத்த அன்பு என்றவாறு. அஃதாவது, தன் கணவனைத் தன்னுயிராகமதித்து வழிபட்டொழுகல். தன் கணவன் பரத்தைமைசெய்தொழுகினும் அவனை வெறுக்காது அவனை வழிபட்டொழுகலே பேரன்பாம். இக்குணம் கண்ணகிபால் விளங்கினமையைத்

தன் கணவனாகிய கோவலன் மாதவி என்னும் பரத்தைவயத்தனாய்ப் பிரிந்தொழுகவும் தான் அவனை வெறுக்காது அவன் ஏவியனசெய்து வழிபட்டொழுகினமையானே அறியப்படும். அங்ஙனமாதலைக் கோவலன் தன் பொருளெல்லாம் மாதவிக்குக் கொடுத்திழந்தபின் கண்ணகிபிடஞ்சென்று அவளணிகளை ஒவ்வொன்றாகக் கேட்ப அவள் அவன் கேட்டபோதெல்லாம் மறுக்காது அன்போடு ஒவ்வொன்றாகக் கொடுத்துவந்தமையானும், பின் மாதவிபால் வெறுப்புற்று வந்து கண்ணகியிடம்

*"சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்*

*குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த*

*இலம்பாடு நாணுத்தரும்"*

என்று கூறினானாகக் கண்ணகி மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லை என்று கூறுகின்றான்போலும் எனக் கருதித்தான் "சிலம்புள கொண்"மென மகிழ்வோடு கூறினமையானும், தன் கணவனாகிய கோவலன் கொலையுண்டான் எனக் கேட்டபோதே

*"பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்*

*திங்கள் முகிலோடும் சேணிலங் கொண்டெனச்*

*செங்கண் சிவப்ப அழுதாள் கேள்வனை*

*யெங்கணாஅ வென்னா வினைந்தேங்கி"*

மயங்கிய கண்ணகி,

*"இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்*

*துன்புறு வனநோற்றுத் துயருறும் மகளிரைப்போன்*

*மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப*

*அன்பனை யிழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ"*

எனப்பலவாறு புலம்பினமையானும் அறியப்படும். கண்ணகி தன்னணிகளைக் கோவலன் கேட்டபோதே கொடுத்தாள் என்பது, 'சென்றகலனோடுலந்த பொருளீட்டுதலுற்றேன்' (கனாத்-எச-ரு) என்று கோவலனே கூறுமாற்றான் அறியப்படும்.

இனி, 'நற்பாலொழுக்கம்' என்பது எவ்வாற்றானும் குலத்திற் கேற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கம் என்றவாறு. இவ்வொழுக்கம் கண்ணகிபால்விளங்கினமை, அவளுக்கு அவள் தோழியாகிய தேவந்தி,

*"சோமகுண்டம் சூரியகுண்டத் துறைமூழ்கிக்*

*காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு*

*தாமின் புறுவர் உலகத்துத் தையலார்*

*போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருகா ளாடுதும்"*

என்றுகூற, அவட்குக் கண்ணகி, அது 'பீடன்று' (-குலத்திற்பிறந்தார்க்குப் பெருமையன்று) என்று கூறியதானானே அறியப்படும்.

இனி, மெல்லியற்பொறையும் என்பது, தன் மனத்திலெழுங்காதல் பிரிவுத்துன்பம் முதலியவற்றையெல்லாம் வல்லென்ற நெஞ்சொடுபொறுக்குந் தலைவனைப் போலாது மெல்லென்ற நெஞ்சினளாய்ப் பொறுக்கும் பொறையும்* என்றவாறு. மென்மையாகிய இயல்போடு கூடிய பொறை எனினுமாம். பொறுத்தல் - தாங்குதல் (-அடக்கியிருத்தல்). இக்குணம் கண்ணகிபால் விளங்கினமையைத்தன் காதலன் மாதவிபாற் பிரியவும் தான் காதலை அடக்கியிருந்தமையானும், பிரிவுபற்றியதுன்பத்தைப் பிறர்க்குப் புலப்படாது அடக்கியிருந்தமையானும் அறியப்படும். அங்ஙனம் அடக்கியிருந்தாள் என்பதை, இளங்கோவடிகள்,

*"கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்*
*உண்ணிறை கரந்தகத் தொளித்தநீ ருகுத்தன"*

என்னும் அடிகளாற்றெரித்துக்கூறல் காண்க. கண்ணகியின் கருங்கண்கள் கோவலன் பிரிவாலாயதுன்பத்தால் நீரைச்சொரிந்தன. எங்ஙனஞ்சொரிந்தன? எனின், அவளால் தன்னகத்தே பொருந்திய கற்பினாற் காக்கப்படலால் உள்ளிடத்து மறைத்து நீரைச்சொரிந்தன என்க. கரந்து - ஏதுப்பொருட்டு. அகம் - கண்ணினகம்: இதயம் எனினுமாம். எனவே கோவலன் பிரிவால் கண்ணீர்வரினும், அதனைத்தன் கற்பால் அடக்கிக்கொள்ளுகின்றாள் என்பது கருத்தாம். நச்சினார்க்கினியரும், மேற்காட்டிய சூத்திரவுரையுள், மெல்லியற் பொறையும் நிறையும் என்பவற்றிற்கு உதாரணமாகக் "கடல்பாடவிந்து" என்பது முதலாகவரும், அகநானூற்றுச் செய்யுளையெடுத்துக்காட்டி, அதனுள் வரும் 'கண்ணிறை நீர்கொண்டு காக்கும்' என்பதற்குக் 'காமமிகுதியாற் கண்தாமே அழவும் கற்பிற் கரக்கும் எனத் தலைவி பொறையும் நிறையும் தோழிகூறியவாறு' என்று கூறுதல் காண்க. வல்லென்ற நெஞ்சொடு பொறுத்தல் என்றதனால், தனக்குற்ற காதன்முதலியவற்றை ஒரு ஆண்மகன் மெலிதாக அடக்கமுடியாமையால் வாய்திறந்து கூறிவிடுவான் என்பதும் ஒருவாறு அடக்கின் வலிதாகவே அடக்கிக் கொள்வானென்பதும் மெல்லென்ற நெஞ்சினளாய்ப் பொறுத்தல் என்றதனால், தனக்குற்ற காதன்முதலியவற்றை ஒரு பெண்மகள் வாய்திறந்துகூறாள் என்பதும் அடக்கிக்கொள்வாள் என்பதும் பெறப்படும். ஒரு பெண்மகள் தனக்குற்ற காதன்முதலியவற்றைத் தன்னாற் காதலிக்கப்பட்ட ஆண்மகனுக்கு வாய்திறந்து கூறாள் என்பது, இராமாவதாரத்துச் சூர்ப்பநகைப்படலத்துள், "தாமுறு காமத்தன்மை தாங்களேயுரைப்பதென்ப - தரமெனலாவதன்றால்" என்று சூர்ப்பநகை கூறுவதாகவருஞ்

---

* மெல்லியற் பொறையும் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருளில் வரும் 'வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் அவனைப் போலாது' என்பது, தொல் -பொருளதிகாரப் பதிப்புக்களுள் ஸ்ரீ எஸ்.கனகசபாபதிப்பிள்ளை பதிப்பில், 'வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் ஆனையைப் போலாது' என்று காணப்படுகின்றது. ஆண்டுத் தலைவனுக்கும் தலைவிக்குமன்றி ஆனைக்கும் தலைவிக்கும் ஓரியைபுமின்மையின் அப்பாடம் பொருந்துமோ என்பது ஆராய்ந்து கொள்ளத்தக்கது.

செய்யுளடிகளானும்,

*"நோயலைக் கலங்கிய மதனழி பொழுதிற்*

*காமஞ் செப்ப லாண்மகற் கமையும்*

*யானென், பெண்மை தட்ப நுண்ணிதிற் றாங்கி"*

என்று தலைவிகூறுவதாக வரும் நற்றிணைச் செய்யுளடிகளானும் (கச) அறியப்படும்.

இனி, நிறையென்பது மறை பிறரறியாமல் நெஞ்சை நிறுப்பது, அதுமேல், 'நிறைகரந்து' என்று காட்டிய உதாரணத்தானே கண்ணகிபால் விளங்கினமை அறியப்படும்.

இனி, 'வல்லிதின் விருந்துபுறந்தருதலுஞ் சுற்றமோம்பலும் பிறவும்' என்பதும் கணவன் கற்பித்தபடி வல்லவாற்றான் விருந்து புறந்தருதலும் சுற்றமோம்பலும் (தெய்வம்பேணலும் அந்தணர்ப்பேணலும் அட்டிற்றொழில் வன்மையும் முதலாகிய) பிறவும் என்றவாறு. இவை கண்ணகிபால் விளங்கினமை, மனையறம்படுத்த காதையுள் வரும்,

*"மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்*

*விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்*

*வேறுபடு திருவின் வீறுபெற"*

என்னும் அடிகளானே அறியப்படும். இன்னும், கொலைக்களக்காதையுள், கண்ணகிகூற்றாகவரும் 'அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் - விருந்தெதிர்கோடலும் இழந்த என்னை' என்னும் அடிகளானும் அறியப்படும்.

மேற்காட்டிய சூத்திரத்துள், 'வல்லிதின் - விருந்துபுறந்தருதல்' என்றது, குடநீரட்டுண்ணு மத்துணை வறுமைக்காலத்தும் எத்துணை விருந்தினர்வரினும் தன் கைவன்மையான் அவரை ஓம்பும்வன்மை. அது,-

*"குடநீர் அட்டுண்ணும் இடுக்கட் பொழுதும்*

*கடனீர் அறவுண்ணும் கேளிர் வரினும்*

*கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி*

*மாதர் மனைமாட்சி யாள்"* (நாலடி-நஅஉ)

என்னுஞ் செய்யுளான் அறியப்படும்.

இத்துணையும் கூறியவாற்றானே இல்லறக்கிழத்திக்குரிய மாண்புகள் இவையென்பது உணரப்படும்.

# சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம்

முனைவர் செ.ரவிசங்கர்
உதவிப்பேராசிரியர்
ஒப்பிலக்கியத்துறை,தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் பதினெண்கீழ்க்கணக்கில் பல்வேறான பண்பாட்டுப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. பண்டைத் தமிழர்களின் பண்பாட்டு வரலாற்றையும், மக்களின் உள்ளத்தின் உணர்வுகளையும் மிகவும் கவனமாகக் கையாண்டுள்ள இலக்கியங்களில் சிறுபஞ்சமூலமும் ஒன்று. சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள். அவை சிறுவழுதுணைவேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்தரி வேர் என்னும் வேர்கள் ஆகும். இதனை உறுதி செய்யும் விதமாகப் பதார்த்த குண சிந்தாமணி என்ற நூலும், பொருட்டொகை நிகண்டும் இந்த ஐந்து வேர்களும் சேர்ந்தது தான் சிறுபஞ்சமூலம் எனக் கூறுகின்றன என்று ராசாராம் கூறுகிறார்.

பொதுவாக வேர்களால் தயாரிக்கப்படும் வேர்களின் மருந்து உடல் நோயைப் போக்குவது போல நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடலும் உள்ளக் கருத்தினையும், உள்ளத்தில் ஏற்பட்டுள்ள நோயினையும் குறைப்பதாக அமைந்துள்ளன. நோய்கள் பொதுவாக இரண்டு வகையில் வரும். 1. வெளிப்புற நோய் அதாவது மருந்துகளால் குணப்படுத்தப்படுவது. 2. மனநோய், இந்நோயை மருந்துகளால் குணப்படுத்த முடியாது. மாறாக நல்ல அறிவுரைகளால் மட்டுமே குணப்படுத்த முடியும் என்பதைச் சிறுபஞ்சமூலத்தில் காண முடிகின்றது. அந்த வகையில் அதுவும் ஒரு மருத்துவம்தான் - மனநல மருத்துவம். அந்த அடிப்படையில் சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம் என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

## சிறுபஞ்சமூலத்தில் மருத்துவம்

சிறுபஞ்சமூலத்தில் மனநல மருத்துவம் பல வகைக் கருத்துக்களில் இடம்பெற்றுள்ளன. அவை:

### நோய் அறியாமல் இருக்க

மனிதனை நோய்கள் பற்றிக்கொள்ளும்: அது எந்த வகையாலும் வரும். இப்படித்தான் நோய்வரும் எனக் கூற முடியாது. அதனால் அந்த நோய் ஒருவனைப் பற்றாமல் இருக்கச் சிறுபஞ்சமூலத்தில் சில கருத்துக்களை ஆசிரியர் கூறுகின்றார். அதாவது,

*“பற்றினான் பற்றற்றான் நூல்தவசி; எப்பொருளும்*
*முற்றினான் ஆகும் முதல்வன்; நூல் - பற்றினால்*
*பாத்துண்பான் பார்ப்பான்; பழியுணர்வான் சான்றவன்*

*காத்துண்பான் காணான் பிணி"* *(8)*

என்று கருத்துரைப்பதனால் பற்றற்றான் தியான சமாதியைப்பற்றினான் நூல் கற்றுக் கடைப்பிடித்து ஒழுகுகின்றவன் வீடுபேற்றை விரும்பி நோற்கின்ற தவசியாவான். எல்லாப் பொருளையும் முற்றவுணர்ந்தவன் கற்றோர் எல்லாருக்கும் தலைவன் ஆவான். அறநூலின்கண் சொன்னபடியே பலரோடு பகிர்ந்துண்பவன் அந்தணனாவான்; பழிக்குக் காரணமான செயல்களை அறிந்து விலக்குபவன் சான்றோனாவான். உடற்குப் பொருந்தாத உணவுகளை மறுத்து நல்லனவற்றை உண்பவன் நோயறியான் என்கிறது. இங்கு உடல் நோய்கள் பெரும்பாலும் நாம் உண்ணுகின்ற உணவினால் வருவதாகும். இன்று உடம்பில் சர்க்கரை, குருதி அழுத்தம் போன்ற நோய்கள் உணவினால்தான் வருகின்றன. எனவேதான் சிறுபஞ்சமூலம் 'உடற்குப் பொருந்தாத உணவுகளை மறுத்து நல்லனவற்றை உண்பவன் நோயறிவான் என்கிறது. அதாவது 'உடற்குப் பொருந்தாத உணவுகளை உண்பவன் நோய்களை அறியமாட்டான்' என்கிறது சிறுபஞ்சமூலம். இக்கருத்தை இன்று பலரும் மறந்து போவதனால்தான் நோய்களில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

**நன்மையுண்டாக**

உடல் மட்டும் நன்றாக நோய் இல்லாமல் வாழ்வதை விட மனமும் எந்த விதமான சிக்கல்களும் இல்லாமல் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மனம் தூய்மையாகவும் அமைதியாகவும் இருந்தால், வாழ்வில் நன்மையுண்டாகும். அதற்கான வழிகளைச் சிறுபஞ்சமூலம்,

*"பிழைத்த பொறுத்தல் பெருமை; சிறுமை*
*இழைத்த தீங்கெண்ணி யிருத்தல்; பிழைத்த*
*பகைகெட வாழ்வதும் பல்பொருளால் பல்லார்*
*நகைகெட வாழ்வதும் நன்று"* *- 16*

என்கிறது. அதாவது பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்வது பெருமையாம். பிறர் செய்த தீங்கினையே எண்ணியிருத்தல் சிறுமையாம். தான் செய்த பகை கெடும்படி வாழ்வதும், செல்வர்களும் சான்றோர்களும் ஏளனம் செய்து நகைக்காது வாழ்தலும் நன்மையுடையனவாம். அதுபோலவே,

*"பொய்யாமை நன்று பொருள் நன்று உயிர்நோவக்*
*கொல்லாமை நன்று கொழிக்குங்கால் பல்லார்முன்*
*பேணாமை பேணுந் தகைய சிறிதெனினும்*
*மாணாமை மாண்டார் மனை"* *- 39*

என்கிறது. பொய் பேசாதிருத்தல் நன்மையாம்; தன்முயற்சியால் வரும் பொருள் நன்மையாம்; பிறிதோர் உயிர் வருந்தும்படி கொல்லாதிருத்தல் நன்மையாம், ஆராயுமிடத்துத் தாம் விரும்புவன பலர் அறிய விரும்பாதிருத்தல் நல்லது; தவசிகள் மனை வாழ்க்கைக்கு மீளாதிருத்தல் நல்லது.

இவ்வாறு நன்மையுண்டாக வாழ்க்கையில் இவைகளைக் கடைப்பிடித்தல் நல்லது. வாழ்க்கை என்பது தானும் மகிழ்ச்சியாக இருந்து பிறரும் மகிழ்ச்சியாக இருப்பதுதான். பிழைகளைச் செய்யாமலும் செய்தவற்றைப் பொறுத்துக் கொள்ளுதலும் மிகப்பெரிய உள்ளத்தைக் காட்டும். எனவேதான் இவை போன்ற செயல்களை மனித வாழ்க்கைக்கு மருந்தாகக் காட்டுகிறார்.

**பிறப்பு எடுக்காத நிலை**

பொதுவாகவே மறுபிறப்பு என்பது இப்பிறவியில் தீமை செய்தால் அதன் விளைவாக எடுப்பது என்கிற ஒரு கருத்து சமுதாயத்தில் நிலவி வருகின்றது. ஆனால் அந்தப் பிறவியை அமைப்பதற்கான மருந்தைச் சிறுபஞ்சமூலம் தருகிறது.

*"பொய்யாமை பொன்பெறினும் கள்ளாமை மெல்லியார்*
*வையாமை வார் குழலார் நச்சினும் - நையாமை*
*ஓர்த்துடம்பு பேருமென்று ஊன்அவாய் உண்ணானேல்*
*பேர்த்துடம்பு கோடல் அரிது" - 19*

அதாவது ஒருவன் பொன்னைப் பெற்றானாயினும் பொய் சொல்லாதிருத்தல், பிறர் பொருளைக் களவு செய்யாதிருத்தல், எளியவர்களை வையாதிருத்தல், தம்மைப் பெண்கள் விரும்பினாலும் உள்ளம் தளராதிருத்தல், தன்னுடம்பு வளர்வதற்காக மற்ற உயிர்களின் ஊனைத்தின்னாதிருத்தல் போன்றவற்றைக் கடைபிடிப்பவன் மறுபிறப்பு எடுக்க மாட்டான் என்கிறது.

மறுபிறப்பு எடுக்காமல் இருப்பதற்கு இவையெல்லாம் மருந்தாக அமைகின்றது. அதாவது ஒரு செயலுக்கு நாம் தருகின்ற அறிவுரையும் ஒருவகையில் அச்செயலுக்கான சிக்கலைத் தீர்த்து வைக்கிறது என்றால் அவையும் மருந்தாகும் என்பதை இப்பாடல் கொடுத்துள்ளது. இது போலவே பிறர் பொருளை விரும்பாமலும் சூதாடாமலும் கீழ் மக்களுடன் நட்புக் கொள்ளாமலும் பிறர் மனம் புண்படும்படி வன்சொல் கூறாமலும் ஊன் உண்ணாமலும் ஒருவன் இருப்பானாயின் அவன் எக்காலத்தும் ஒழுக்கத்தில் தளர்ந்து மாறி மாறிப் பிறந்து ஊனுடம்பைக் கொள்ள மாட்டான் என்பதைச் சிறுபஞ்சமூலம்,

***"கள்ளான் சூதென்றும் கழுமான் கரியாரை***
***நள்ளான் உயிரிரங்க நாவாடான் - எள்ளானாய்***
***ஊன்மறுத்துக் கொள்ளானேல் ஊனுடம்பு எஞ்ஞான்றும்***
***தான்மறுத்துக் கொள்ளான் தளர்ந்து" - 21***

என்று பாடலை அமைத்துள்ளார் காரியாசான். இவையெல்லாம் மறுபிறப்பு எடுக்காமல் இருப்பதற்கான மருந்தாகும்.

**மாணவர் நிலை**

மாணவர்களுக்குத் தேவையான கருத்துக்களை ஆசிரியர் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றார். ஒரு மாணவன் நல்ல முறையில்

இல்லையென்றால் அவனுடைய ஆசிரியனுக்கு நோய் போன்றவன் ஆகின்றான் என்பதை,

*"ஆண் ஆக்கம் வேண்டாதான் ஆசான்; அவற்கு இயைந்த*
*மாணாக்கன் அன்பான் வழிபடுவான் - மாணாக்கன்*
*கற்பனைத்தும் மூன்றுங் கடிந்தான் கடியாதான்*
*நிற்பனைத்தும் நெஞ்சிற்கோர் நோய்"* - 29

அதாவது ஆசிரியர் என்பதற்கான தகுதி பிரம்மச்சரியம் காப்பது. அவனுக்குரிய மாணாக்கர் இரண்டு வகைப்படுவர் 1.அன்புடையோர் 2.வழிபடுவோர். இவர்கள் இரண்டுபேரும் தாம் கற்கின்ற அளவும் காமம், வெகுளி, மயக்கம் என்கின்ற மூன்றையும் நீக்குதல் வேண்டும். அவற்றை நீக்காதவர் ஆசிரியனின் மனத்திற்கு நோய் போன்றவர் ஆவார். இந்த நோயைத் தீர்க்க மாணவன் செய்ய வேண்டியதைச் சிறுபஞ்சமூலம் தெளிவுபடுத்துகின்றது. அதாவது மாணவர் களுடைய குடுமியானது கருநெய்தல் அரும்பின் அளவாயிருத்தல் வேண்டும். அவனுடைய மயிரை ஒரு திங்கள் அளவு வெட்டாது இருக்கலாம், ஆசானை வலங்கொண்டு வணங்குதலும், நுட்பமான நூல்களை ஓதுதலும் ஓதியவற்றின் பொருளைக் கேட்டலுமான இவை மூன்றும் இன்றியமையாதனவாம்.

ஆசிரியரை வணங்குதல், ஓதுதல், கேட்டல் ஆகிய மூன்றும் மாணாக்கர்க்குரிய கடமையாம். இம்மூன்றும் மாணவர்களுக்கான மருந்து. இவைதாம் மாணவர்களின் மனத்தை நோய் இல்லாமல் காக்கும் என்பதாகக் கருத்துரைக்கின்றார்.

**இனிமைக்கு மருந்து**

வாழ்க்கை என்பது இன்பம் துன்பம் இரண்டும் கொண்டது. இரண்டும் நிலையானது அல்ல இவை மாறிக் கொண்டேயிருப்பது. அந்த வகையில் மனிதன் வெகுளியாகிய நோயை விட்டொழிப்பதற்கான மருந்தினைச் சிறுபஞ்சமூலம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

**"உயிர் நோய் செய்யாமை உறு நோய் மறத்தல்**
**செயிர் நோய் பிறர்கட் செய்யாமை செயிர்நோய்**
**விழைவு வெகுளி இவை விடுவா னாயின்**
**இழவன்று இனிது தவம்"** - 32

பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யாமை, தனக்குப் பிறரால் வந்த துன்பத்தை மறத்தது, பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தல். கோபம், ஆசை ஆகியவற்றை விட்டு விடுதல் தவமாகும்; குறைவுடையதன்று. இனிமை யுடையதாகும் என்று இனிமையான வாழ்க்கையை மேற்கொள்வதற்கான மருத்துவத்தை இப்பாடலில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சங்கஇலக்கிய ஆராய்ச்சிவளம்

பேரா.முனைவர் **இ.கி.இராமசாமி** (ப.நி.)
மேனாள் தமிழ்த் துறைத்தலைவர்
தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் ஆடவர் கல்லூரி,
மதுரை - 17.

## சென்ற இதழின் தொடர்ச்சி

போர்முடிந்து மக்களே இல்லாதுபோன ஊருக்கு ஒருவீரனை மட்டும் காவலுக்குப் போடுவர். அவன் தனியே இருந்து உணவுண்டு அங்குக் கிடப்பான். அதுபோல, தலைவனைப் பிரிந்த தலைவி, விருந்தினரை ஓம்பும் வாய்ப்பை இழந்தாள்; அவளுடைய உள்ளமும் தலைவனிடம் சென்றுவிட்டது; உலகுக்கு மழைபோல அவளுக்கு அவனே எல்லாச் சுகமும் கொடுத்திருந்தான்; இப்போது அவள் தனியே இருக்கிறாள். அவள்நிலை, பாழாய்ப்போன ஊரைக்காக்கும் தனிமகன் நிலை போன்றது என்று பாடிய புலவருக்குத் தனிமகனார் என்று பெயர் சூட்டிய இலக்கியப் படிப்பாளிகள் நன்றிக்குரியவர்கள் என்பது தெ.பொ.மீ. சொல்ல வந்த கருத்தாகும்.

"....................

*நெஞ்சம் அவர்வயின் சென்றென ஈண்டு ஒழிந்து*
*உண்டல் அளித்தென் உடம்பே; விறல்போர்*
*வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி*
*வாழ்வார் போகிய பேரூர்ப்*
*பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே"* (நற்.153)

இவ்வாறு தெ.பொ.மீ.யின் நற்றிணை ஆராய்ச்சி அதன் பொருண்மையில் மட்டும் நில்லாது அதனைப் படித்துச் சுவைத்துத் தொகுத்தாரின் நன்றியுணர்வையும் சுட்டுகின்றது. நல்ல ஒழுக்கமே நற்றிணை என்ற புதுவிளக்கமும் சிந்திக்கத் தூண்டுகிறது. மற்றும் குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் நல்லொழுக்கம் சொல்லப்படவில்லையா? என்ற வினாவையும் எழுப்ப வைக்கின்றது.

## தெ.பொ.மீ. ஆய்வும் ப.மருதநாயகம் மேலாய்வும்

சங்ககாலக் கவிதை இலக்கியத்தை ஆராய்ந்து தெ.பொ.மீ. சொல்லிய முடிபுகளைக் கருத்தூன்றிப் பயின்று மேலாய்வு செய்த ப.மருதநாயகம் மேலும் பல உண்மைகளைக் கண்டறிந்து மொழிந்துள்ளார்.

1. இறையனார் களவியலுரை கூறும் முச்சங்க வரலாற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார் தெ.பொ.மீ. (சங்க இலக்கிய ஆய்வு, தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும், ப.9).

2. தமிழ்ச் சங்க வரலாற்றில் கூறப்படும் அகத்தியர் பற்றிய செய்திகள் கற்பனையானவை என்கிறார் தெ.பொ.மீ. (மேலது, ப.10).

3. திருக்குறள் சங்ககாலத்திலோ சங்க காலத்தை ஒட்டியோ தோன்றியிருக்க வேண்டும் என்பதும் தெ.பொ.மீ. கருத்து (மேலது, ப.13).

4. சங்ககாலத்தில் கவிதையின் பயனே போற்றப்படுகிறது. ஏனைய புறக்கூறுகளெல்லாம் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. கவிஞன் உயர்ந்தவனாக மதிக்கப்படுகிறான். அவன் பெயர் நன்றியுணர்வோடு நினைவில் கொள்ளப்படுகிறது (மேலது, ப.23).

5. மொழி ஆளுமையால் - கவிதை ஆளுமையின் திறத்தால் செம்புலப் பெயல் நீராரும் ஏனைய பலரும் தம் இயற்பெயரை இழந்துள்ளனர் (மேலது, ப.24).

6. பாணர் கூற்றாகவும் விறலி கூற்றாகவும் வரும் பாடல்களைக் கொண்டு அவற்றைப் பாடியோர் பாணரும் விறலியரும் ஆவர் என்று முடிவு செய்தல் தவறாகும். அவை, கவிஞர்கள் தங்களை வேறுவேறு பாத்திரங்களாகப் பாவித்துப் பாடியவை ஆகும் (மேலது, ப.76).

7. கபிலரின் குறிஞ்சிப்பாட்டைக் கேட்ட ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் பிற்காலத்தில் தமிழ்ப்புலவனாகி அவனே ஒரு அகப்பாடலும் பாடியிருக்கிறான்.* அது குறுந்.184ஆம் பாடலாகும் (மேலது, ப.122). (கபிலர் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் முதன்முதலாக மலர்க் கண்காட்சி (Flower Show) நடத்திய பெருமைக்குரியவர் என்பது இந்த ஆய்வாளரின் கருத்து)

8. காளிதாசனின் குமாரசம்பவக் காவியத்தில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவற்றின் தாக்கம் உள்ளது என்று நிறுவுகிறார் தெ.பொ.மீ.

மேலும், "திராவிட மொழி பேசுவோரும் ஆரியமொழி பேசுவோரும் வேத காலத்திலிருந்தே ஒருவரோடு ஒருவர் கலந்து வந்ததால் இருவர் பண்பாடும் ஒரு பண்பாடாகவே வளரத்தொடங்கியது. இந்தியா பரந்த நாடு. அங்கே பலப்பல இடத்தில் உள்ளவரும் தங்களுடைய பழைய கதைகளுக்கு ஏற்பப் புதிதாகத் தாங்கள் கேட்ட கதைகளையும் மாற்றிக் கொள்வதை நாம் பார்க்க வேண்டும். இந்தப் பரிமாற்றத்தைத் திராவிட ஆக்கம் என்றோ, தமிழ் ஆக்கம் என்றோ, ஆரிய ஆக்கம் என்றோ கூறுவது உண்மையாகாது; இந்திய ஆக்கம் என்று கூறினால் பொருத்தமாகலாம்" (தெ.பொ.மீ. பத்துப்பாட்டாய்வு, பக்.33-34) என்றும் முடிபுரைக்கின்றார்.

9. முல்லைப்பாட்டின் திணை அமைதியை ஆராய்ந்த தெ.பொ.மீ. அது நெய்தல் திணையையோ, பாலைத்திணையையோ சார்ந்தது அன்று என்கிறார். நச்சினார்க்கினியர் மற்றும் மறைமலையடிகள் கருத்துக்களோடு ஒத்தும் உறழ்ந்தும் விளக்கம் எழுதியுள்ளார். நூற்பெயரை மட்டும் வைத்துக் கொண்டு அதனை அவர் முல்லைத்திணைப்பாட்டு என்று சொல்லவில்லை.

வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ தலைவனும் தலைவியும் மீண்டும் கூடுவர் என்பதற்கான குறிப்பு இருப்பதால் அது முல்லை என்கிறார்.

பிரிவுணர்வே மேலோங்கி அதில் நிற்கவில்லை. இரங்கல் குறிப்பு ஓரிரு இடங்களில் காணப்பட்டாலும் அது நெய்தல் ஆகாது என்கின்றார். ப.மருதநாயகம் சுட்டிக்காட்டியுள்ள இதுபோன்ற ஆராய்ச்சி முடிபுகள் இன்னும் பலவுண்டு.

முல்லைப்பாட்டின் கிளவித்தலைவன் போர்வயின் பிரிந்து சென்றவன். அவன் வெற்றிபெற்றுத் திரும்பி வருது உறுதி. ஆனால் அவன் தன்படையிலும் மாற்றான் படையிலும் மாண்டுபோன வீரர்களையும் களிறுகளையும் எண்ணி வேதனைப்படுகிறான். பாசறையில் உறக்கமின்றிப் புலம்புகிறான். அவன் தலைவியிடம் கொண்டிருந்த அன்பு, உலக உயிர்கள்மீது பேரன்பாக அருளாக விரிவடைகிறது. இது போரை வெறுத்த அசோகனையும், உயிர்களின் துன்பங்கண்டு இரங்கிய புத்தனையும், எல்லா மனிதர்களிடமும் அன்பு காட்டிய ஏசு கிறிஸ்துவையும், அறநெறிகண்ட மகாவீரரையும், போர்க்களத்தே கடமையுணர்வைத் தூண்டிய கண்ணனையும் நம் நினைவுக்குக் கொண்டுவருகிறது என்கிறார் தெ.பொ.மீ. கலிங்கப் போரால் மனம் வெதும்பிய அசோகன் காலத்துப் பண்பாட்டுச் சூழலில் எழுந்த உயர்ந்த கவிதையாக முல்லைப்பாட்டைக் கொள்வது தவறாகாது என்கிறார். மேலும் முல்லைப்பாட்டின் சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் ஓசை, பொருள் நயங்களையெல்லாம் விளக்கி அது நப்பூதனார் மனித குலத்திற்கு அளித்த பெருஞ்செய்தியைத் தரும் ஒரு மந்திரமாக உயர்கிறது என்பது தெ.பொ.மீ.யின் முடிவு (முந்துநூல், பக்.178-180).

**மருதப்பாட்டும் நெய்தல்பாட்டும்**

குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை என்று வெளிப்படையாகத் திணையுடன் கூடிய நூல்கள் இருந்தாலும் நெய்தல்பாட்டு, மருதப்பாட்டு என்று சொல்லும்படியாக வேறுநூல்கள் இல்லை என்று கருத்துரைத்துள்ளார். நெடுநல்வாடையை நெய்தல்திணை என்று கூறலாம் என்று முதலில் சொல்லிவிட்டு அவரே தம் கருத்தை மாற்றிக்கொள்ளுகின்றார் (தெ.பொ.மீ. தமிழ்க் களஞ்சியம், ப.229).

**நிறைவுரை**

சங்க இலக்கிய ஆராய்ச்சி அணுகுமுறையில் புதுப்பார்வை செலுத்தி தெ.பொ.மீ. கண்டறிந்து கூறிய முடிபுகள் சுவெலபில், ஜார்ஜ் ஹார்ட், துபையான்ஸ்கி போன்ற அறிஞர்களுக்குப் பல்லாற்றானும் பயன்பட்டன. அந்த வகையில் சங்க இலக்கிய ஆராய்ச்சியில் தெ.பொ.மீ. பதித்த தடத்தில் மேலை அறிஞர்கள் பயணிப்பது தெ.பொ.மீ.க்குச் செய்யப்படும் சிறப்பாகும்.

***குறிப்பு**

ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் பாடிய குறுந்.184ஆம் பாடல் தலைவன் கூற்றாய் அமைந்த களவொழுக்கப்பாடல். மனச்சாட்சியை விடுத்துச் சான்றோர் பொய் சொல்லமாட்டார். யாரும் அப் பரதவர் ஊர்ப்பக்கம் போக வேண்டாம். அங்கிருந்து பரதவப் பெண்ணைப் பார்த்து நான் மனத்தைப் பறிகொடுத்துவிட்டேன். நீங்களும் அங்குச் சென்றால் மனத்தை இழந்து

விடுவீர்கள் என்பது அப்பாட்டின் பொருள். அதனை நெய்தல் திணையாகக் குறித்துள்ளனர்.

*"அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை*
*குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செல்லல்*
*இதற்கிது மாண்டது என்னாது அதற்பட்டு*
*ஆண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்*
*மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை*
*நுண்வலைப் பரதவர் மடமகள்*
*கண்வலைப் படூஉம் கான லானே".*

தமிழ்ப் பாடங்கேட்ட வேற்று மொழியாளன், தமிழ்ப்புலவனாகிய செய்தி வியப்பூட்டுகின்றது.

**பார்வை நூல்கள்**


1. இளங்கோ, பி.எஸ்., சர்.பி.தியாகராசர் முதல் டாக்டர் கலைஞர் வரை, மலைமணி பதிப்பகம், சென்னை, 1975.
2. எழுத்துச்சீர்திருத்தம் - தந்தை பெரியார், (எம்.ஜி.ஆர். அரசின் ஆணையுடன்) பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை, 2002.
3. தெ.பொ.மீ. களஞ்சியம் -2, தமிழ் இலக்கிய வரலாறு, காவ்யா வெளியீடு, சென்னை, 2011.
4. தெ.பொ.மீ. களஞ்சியம் 5, சங்கத்தமிழ், காவ்யா வெளியீடு, சென்னை, 2007.
5. தெ.பொ.மீ. தமிழ்க்களஞ்சியம், இராம.சுந்தரம் (தொ.ஆ.), தெ.பொ.மீ. அறக்கட்டளை, மதுரை, 2000.
6. பொற்கோ, தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிமிடெட்., சென்னை, 1986.
7. மருதநாயகம், ப., சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008.

# சங்கச் செய்திகள்

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 02.08.2016 அன்று முற்பகல் அரசுப் பணித்தேர்வு மற்றும் வங்கித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது.

நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்களும் கல்லூரிச் செயலாளர் இராணி.ந.இலட்சுமி குமரன் சேதுப்தி அவர்களும் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்களும் முன்னிலை வகித்தனர். தங்களது உரையில் போட்டித் தேர்வுகள் இன்று காலத்தின் கட்டாயம். மாணவர்களின் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தவே இந்தப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படுகின்றன. செந்தமிழ்க் கல்லூரியின் மாணவர்களுக்கும், முன்னாள் மாணவர்களுக்கும் கட்டணச்சலுகையும் தவணை முறையில் செலுத்தும் வசதிகளும் செய்து தரப்படும். மாணவர்கள் அதிகளவில் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என்று கூறினார்கள்.

பயிற்சி வகுப்புகளைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் ம.திருமலை அவர்கள் ஒவ்வொரு மாணவனையும் சிறப்பாக உருவாக்குவது ஆசிரியர்களின் கடமை ஆகும். போட்டிகள் நிறைந்த இந்த உலகில் பட்டப்படிப்பு மட்டும் நமக்குப் போதாது கூடுதலாகக் கல்வியறிவு, உழைப்பு அவசியம். கடின உழைப்புக்குப் பிறகு கிடைக்கும் வெற்றியே சிறந்த வெற்றி ஆகும். பொழுது போக்கு நமது இலக்குக்குத் தடையாக அமைந்து விடும். வாழ்வில் இலக்கு என்பது மிகவும் அவசியம் என்று எழுச்சியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாகக் கல்லூரியின் முதல்வர் (பொ) முனைவர் சு.விஜயன் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரியின் துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா நன்றியுரை ஆற்றினார். கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் விழாவில் திரளாகக் கலந்து கொண்டனர்.

---

7.8.2016ஆம் நாள் கவிஞரேறு வாணிதாசன் அவர்களது நினைவேந்தல் நிகழ்வு சங்க வளாகத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நினைவேந்தலில் உதவிப்பேராசிரியர் பா.நேருஜி வாணிதாசன் அவர்களைப் பற்றிக் கூறும்பொழுது புரட்சிக்கவி பாரதிதாசனின் வழித்தோன்றலாக விளங்கிய கவிஞர்களுள் இவர் முதன்மையான கவிஞராக விளங்கியவர் என்றும், பகுத்தறிவு இயக்கப் பாவலனாக விளங்கியவர் என்றும் கூறினார். மேலும் அன்னாரின் படைப்புக்களில் இயற்கை மற்றும் பெண்களை எவ்வாறு படைத்துள்ளார் என்பது குறித்தும் மாணவர்களுக்குப் புரியும் வகையில் ரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணக்கர்கள் கலந்துகொண்டனர்.

15.08.2016ஆம் நாள் இந்தியத் திருநாட்டின் 67வது விடுதலைத்திருநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தேசியக்கொடியினை பெரும்புலவர் இரா.இளங்குமரனார் அவர்கள் ஏற்றிவைத்தார். விழாவிற்கு நான்காம் தமிழ்ச் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப்பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

24.8.2016ஆம் நாள் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்பிள்ளை அவர்களது நினைவேந்தல் முற்பகல் 11.00 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலையணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பேராசிரியை ச.அங்கயற்கண்ணி வெ.இராமலிங்கம்பிள்ளை குறித்து அவரது உரையில் கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது என்ற பாடலுக்குச் சொந்தக்காரர், அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, ஓவியர், நாடக ஆசிரியர், நாவலாசிரியர் எனப் பன்முகச் சிந்தனையாளர் என்றும் அன்னாரது பாடற்சிறப்புக்களையும் எடுத்துக்கூறினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் மாணக்கர்கள் கலந்துகொண்டனர்.


25.8.2016ஆம் நாள் வ.சு.செங்கல்வராயபிள்ளை அவர்களது நினை வேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை மாணவர் வெ.பாலமுருகன், இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி தெ.பொன்அமிர்தவள்ளி ஆகிய இருவரும் அன்னாரின் சிறப்புக்களைப் பற்றி எடுத்துரைத்தனர். இவர்கள் அன்னாரைப்பற்றிக் கூறும்பொழுது அவர் சிவநெறிச் செல்வராக வாழ்ந்து தேவார ஒளிநெறி, திருவாசக ஒளிநெறி, திருக்கோவையார் ஒளிநெறி என்னும் பக்திப் பனுவல்களை எழுதித் தமிழ்த் தொண்டாற்றிய பெருமகனார் என்றும், அவர் பெற்ற நணிகைமணி, இராவ் சாஹிப் பட்டங்களைப் பற்றியும் அவர்களது நடையில் எடுத்துரைத்தனர். முன்னதாக அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் மாணக்கர்கள் கலந்துகொண்டனர்.

27.8.2016ஆம் நாள் தமிழ் அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் மற்றும் அ.ச.ஞானசம்பந்தம் ஆகியோரது நினைவேந்தல் முற்பகல் 11.00 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. தெ.பொ.மீ. அவர்களைப் பற்றி உதவிப் பேராசிரியர் அ.நந்தினி கூறுகையில் தமிழ் மொழி உயரவேண்டுமானால் தமிழன் உயரவேண்டும் என முழக்கமிட்ட முதல் சான்றோர் என்றும் தன்னலம் கருதாத மாமனிதர் என்றும் அவர் எழுத்துக்கள் தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்ப்பதைப் பற்றியும், அவர் பெற்ற பட்டங்களான 'பல்கலைச் செல்வர்' 'தமிழ்க்கடல்', "பேரறிஞர்", பல்மொழிப்புலவர் ஆகியன பற்றியும் எடுத்துரைத்தார். அன்னார் மதுரை காமராசர் பல்கலைக்கழக முதல் துணைவேந்தராகப் பணியாற்றியவர் என்பதையும் நினைவுகூர்ந்தார்.


பேராசிரியர்.அ.ச.ஞானசம்பந்தம் அவர்களைப் பற்றி உதவிப்பேராசிரியர் பூ.பூங்கோதை அவர்கள் கூறுகையில் அவர் ஆழ்ந்த நுண்ணறிவும், பரந்த நூற்பயிற்சியும் அமைந்த பேராசிரியப் பெருந்தகை. அன்னார் சாகித்ய அகாதெமி, சங்கப்பலகை, குறள்பீடம் எனப்பல விருது பெற்றவர் சைவ சமய அறிஞராகவும், பாடநூல் தயாரிப்பாளராகவும், தமிழ் விரிவுரையாளராக வாழ்ந்தமை குறித்தும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணக்கர்கள் கலந்துகொண்டனர்.

31.8.2016ஆம் நாள் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் நினைவேந்தல் முற்பகல் 11.00 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. அன்னாரைப் பற்றி உதவிப்பேராசிரியர் ஜெ.போ.சாந்திதேவி கூறுகையில் ஆபிரகாம் பண்டிதர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பறியது என்றும், அன்னார் தமிழுக்கு மட்டுமன்றி இசைக்கும், மருத்துவத்திற்கும் தொண்டாற்றியுள்ளார் என நினைவுகூர்ந்தார்.


## செப்டம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்




சி.இலக்குவனார்
(செப்.3)




பாரதியார்
(செப்.11)



மறைமலையடிகள்
(செப்.15)



திரு.வி.க
(செப். 17)



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
(செப். 26)



விவேகானந்தர்
(செப். 27)


பதிப்பாசிரியர்: பேரா. இரா.சதாசிவம்

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. இரா.இளங்குமரன்

முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் திரு. இராமசுந்தரம்
முனைவர் திரு. ம.திருமலை
முனைவர் திரு. இ.மறைமலை
முனைவர் திரு. பெ.சுயம்பு
முனைவர் திரு. செ.கந்தசாமி
முனைவர் திரு. முருகரத்தனம்
முனைவர் திரு. கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் திரு. மு.மணிவேல்
முனைவர் திரு. ம.பெ.சீனிவாசன்
முனைவர் திரு. இ.கி.ராமசாமி
முனைவர் திரு உ.கருப்பத்தேவன்

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-625 009.